# உறவுகள்

*Uravukal*

ஐப்பசி / கார்த்திகை / மார்கழி 2022

உம் திருவுளம் நிறைவேற்ற
ஆண்டவரே
இதோ வருகின்றேன்.(திபா 40)

Amonerie Tamoule catholique Srilankaise 57, Bld de Belleville, 75011 - PARIS - FRANCE.

இதழ் 84

இலங்கைத் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப்பணியகத்தின் காலாண்டுப் பத்திரிகை




பாடுவோம் பாடுவோம் மீட்பின் நற்செய்தியை
பகிர்வோம் பகிர்வோம் கிறிஸ்மஸ் நல்வாழ்த்துக்கள்

ஆண்டவரின் பேரன்பை என்றென்றும் நான் என்றும் பாடுவேன்.

# உறவுகள்
Uravukal

**ஆசிரியர்:**

அருட்பணி: போல் மத்தியூ மதன்ராஜ்
பணியக இயக்குனர்

**உதவி ஆசிரியர் குழு:**

திருமதி: றெஜீனா சிவகுமாரன்
திரு: சில்வெஸ்ரர் தம்பிராசா - மறையாசிரியர்
திரு: ஆனந்தன் செபமாலை
திருமதி: தயாளினி வில்லியம் றெஜினோல்ட்
திருமதி: ஏஞ்சல் யேக்கப்
செல்வி: புளோறன்ஸ் யாழ்நிலா

**மறையாசிரியர்:** திரு: ரி. எம். சந்தியாகு

**தொடர்புக்கு:**

« URAVUKAL »
Aumônerie Tamoule Catholique
Srilankaise
Chapelle Notre Dame Réconciliatrice
57, Bld de Belleville
75011 Paris - France

**Tel:** 01 48 06 95 05
**E - mail:** uravukhal.france@gmail.com
**Website:** www.uravukal.org

**வெளியீடு:**
இலங்கைத் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகம் - பிரான்ஸ்

No
84
2022

**சந்தா விபரம்**

தனிப்பிரதி ஒன்று: 2€
வருடச் சந்தா விபரம்: 20€
ஏனைய நாடுகளுக்கு: 22€

**கணினி வடிவமைப்பு:** றெஜீனா சிவகுமாரன்
Uravukal
இணையதள பதிப்பாசிரியர்


## ஆசிரியர் எண்ணம்

**கூடி செபிக்கும் குடும்பம் குலைந்து போகாது. ஏனெனில் கடவுளால் இயலாதது ஒன்றும் இல்லை (லூக்கா 1:37)**

இறை இயேசுவின் இனிய என் அன்பு உறவுகளே! இறையாசீரும் இதயம் நிறைந்த அன்பு வணக்கங்களும்.

கோடை விடுமுறை எல்லாம் முடிந்து பரபரப்பான வாழ்க்கை நிலை தொடங்கி விட்டது. பிள்ளைகளின் கல்வி பற்றிய சிந்தனை, வேலை பலுக்கல், விலை வாசி ஏற்றம், பொருளாதார தட்டுப்பாடு, போக்குவரத்து சிரமங்கள், இத்தனைக்கும் மத்தியில் எம் அன்றாட வாழ்க்கை கடந்து செல்கிறது. இதில் நாமாக செயல்படவில்லை. எம்மை படைத்து, மீட்டு, பாதுகாத்து,வழிநடத்தும் இறைவனின் மேலான அன்பும், இரக்கமும், வல்லமையுமே எம்மை வழி நடத்துகிறது.

இந்த உண்மையை ஒவ்வொருவரும் உணர்ந்து வாழ்ந்தோம் என்றால் நம்பிக்கை விசுவாசம் நிறைந்த இறைவனின் மக்களாக வாழ்வோம். புனித பவுல் கூறியது போல, நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் பெயரால் எல்லாவற்றிக்காகவும் « எப்போதும் தந்தையாம் கடவுளுக்கு நன்றி செலுத்துங்கள் » என்ற வார்த்தையை உள்ளத்தில் இருத்தியவர்களாக வாழ்வோம்.

அன்னை மரியாள் தன் வாழ்நாளில் இறை சித்தம் ஏற்று தளர்வில்லா அருள் நிலையில் வாழ்ந்து, எமக்காக நல்ல வழிகாட்டியாக இருக்கின்றாள். ஆகவே செபமாலை அன்னையின் மாதமாக ஐப்பசி மாதத்தை நினைவு கூர்ந்து திருச்செபமாலையை செபிக்கும் நாம் எம் குடும்பங்களுடன் ஒன்றினைந்து செபிபோம். அமைதியின் அன்னை எம் வயல் வெளி மாதாவை எம் பதினெட்டு பணித்தளங்களிலும் உள்ள எம் அன்பு உறவுகளின் வீடுகளுக்கு எடுத்துச் சென்று திருச்செபமாலை செபிக்கின்றோம்.

அத்தோடு எம் பணியகம் உருவாகி இறைவனின் கருணையினால் இருபத்தேழு ஆண்டுகளை மகிழ்வோடு இம் மாதம் கொண்டாடுகின்றது.

கார்த்திகை மாதம் அனைத்து புனிதர்களின் திரு நாளை நினைவு கூர்வதோடு மரித்த அனைத்து ஆன்மாக்களுக்காகவும் மன்றாட பொறுப்பு பெற்றுள்ளோம். மார்கழி குளிரினிலே மாடடை குடிலில் எம் மன்னவன் இயேசு பாலனின் பிறப்பின் மகிழ்வை கொண்டாட ஆவலோடு காத்திருக்கிறோம்.

« இறக்கத்தான் பிறந்தோம் அதுவரை இரக்கத்தோடு வாழ்வோம் » என்ற அன்னை தெரேசாவின் வார்த்தையை எம் வாழ்வாக்கி இவ்வாண்டில் ஆசீர்வாதங்களோடு பிறக்கும் புதிய ஆண்டை அன்பும் அருளும் நிறைந்த ஆண்டாக வரவேற்க ஆசியோடு அழைத்து நிற்கின்றேன்.

உறவில் நிலைக்கும்,
அருள்பணி: போல் மத்தியு மதன்ராஜ் அ.ம.தி.

# யார் அந்தப் பெண்?

(சில வருடங்கள் முன்)



**பல வருடங்களாக நீரழிவு வியாதியால் கஸ்டப்பட்டு வாழ்ந்து வரும் ஞானசீலன் பற்றிய கதை இது.....**

இவர் ஒரு மாதா பக்தன். நல்ல ஊக்கமுள்ள உழைப்பாளி. அது மட்டும் அல்ல பிறருக்கு உதவி செய்வதிலும் முன் நிற்பவன். “முடியாதவர்களுக்கு முதல் உதவி செய்வதே வாழ்க்கையில் நீ செய்த முதலீடாகும்”. “தொழு நோயோடு போட்டி போடு தொழும் தெய்வத்தோடு போட்டி போடாதே” இப்படி அடிக்கடி சொல்லிக் கொள்வான்.

அன்று ஞாயிற்றுக்கிழமை காலை சாட் மாதா கோவிலுக்கு திருப்பலியில் பங்கு கொள்ள தனது தங்கையுடன் காரில் புறப்பட்டுப் போனான். அவன் நீரழிவு வியாதிஸ்தனாக இருந்தாலும் நிதானமான ஒரு சாரதி. பாதங்கள் இரண்டும் இரத்த ஒட்டக் குறைவால் சரியாக செயல்பட முடியாதவை. கூர்மை காணாத கண்கள். மாதா துணை இருப்பாள் என்ற மனத்துணிவுடன் காரை ஓட்டிக்கொண்டு போய்ச் சேர்ந்தான். சாட் அன்னை ஆலயத்திற்கு. அவன் ஆலயத்தினுள் அணுகவும் குருவானவர் திருப்பலியை ஆரம்பிக்கவும் சரியாக இருந்தது. ஆலயம் பக்தர்களால் நிறைந்து இருந்தது. ஆனாலும் ஒரு இடத்தில் ஐந்து ஆசனங்கள் சொல்லி வைத்தாற் போல் காலியாக இருந்தன. அதில் ஒரு ஆசனத்தில் அமர்ந்து கொண்டான் ஞானசீலன்.

பூசை வேளை குருவானவரின் போதனைகளை தன்னை மறந்து கேட்டுக்கொண்டிருந்த ஞானசீலன் தன் கால்களில் சிறிது மாற்றத்தை உணர்ந்தான். மரத்துப் போயிருந்த தன் பாதங்கள் சிறிது குணமாவதை உணர்ந்து, பக்கத்தில் இருந்த தன் தங்கைக்கு கூறினான் ஞானசீலன்.

திருப்பலி முடிந்து மன நிறைவோடு பூசை பார்த்த ஞானசீலன் தன் தங்கையுடன் தூண் மீது வீற்றிருக்கும் மாதா முன் மெழுகு தீபம் ஏற்றி மாதாவுக்கு நன்றி கூறிவிட்டு வீடு திரும்பிக் கொண்டு இருந்தான். அவன் வாகனம் வீதியில் ஓடிக்கொண்டிருந்ததே தவிர, அவன் நினைவு எல்லாம் ஆலயத்தினுள் நடந்த அதிசயத்தைப் பற்றி சிந்தித்துக் கொண்டே இருந்தது. வீதி விபத்து ஒன்றுமில்லாமல் வீடு வந்து சேர்ந்துவிட்டனர் இருவரும்.

திங்கள், செவ்வாய், புதன் ஓடி மறைந்து வியாழன் விடிந்தது. ஞானசீலன் நெற்றியிலே மாதாவின் நினைவுதான். நாட்கள் நகர நகர அவன் குணமடைவதை உணர்ந்தான். தன் தங்கையை அழைத்து தான் குணமடைந்து வருவதாகவும், தன் உடல் நிலையில் மாற்றம் தெரிவதாகவும், அடுத்த ஞாயிறு மாதாவின் ஆலயத்துக்குப் போய், அந்த தாய்க்கு தலை வணங்கி நன்றி கூறுவோம் என்று கூறி முடிப்பதற்குள்... ஆம் ஆம் என்னிடமும் அதே ஆசைதான் என்று கூறி முடித்தாள் தங்கை வதனா. அடுத்த ஞாயிறும் வந்தது. ஆலயமணி அடிப்பது போல் வீட்டு அலாரம் மணி அடித்தது. காலை எழுந்து காலை கடனை முடித்துக் கொண்டு ஆலயம் நோக்கி புறப்பட்டனர் ஞானசீலனும் தங்கையும்.

அன்று மாசி மாதம் சற்று குளிர். தெருவெல்லாம் பனிப்புகார். வேகமாக பயணிக்க முடிய வில்லை. சற்று தாமதமாகவே ஆலயத்தினுள் பிரவேசித்தனர். குருவானவர் திருப்பலியை ஆரம்பித்து விட்டார். கடந்த ஞாயிறுக்கிழமை இருந்த ஆசனம் நோக்கிப் போனான் ஞானசீலன். ஆனால் அந்த ஆசனங்களில் முதல் ஆசனத்தில் ஒரு வெள்ளைக்காரப் பெண் அமர்ந்திருந்தாள்.

அவள் அருகில் போய் (May I sit near to You) உன் ஆசனத்தின் பக்கத்தில் நான் அமரலாமா? என்று பணிவாக கேட்டார் ஞானசீலன். Oh yes என்றாள் அந்தப் பெண். அவனும் அவள் அருகில் இருந்த ஆசனத்தில் அமர்ந்துகொண்டு திருப்பலியில் கவனம் செலுத்திய வண்ணம் இருந்தான்.

சிறிது நேரத்தில் அந்தப் பெண்மணி “ பக்கத்தில் பல ஆசனங்கள் காலியாக இருக்கின்றனவே, ஏன் என் அருகில் வந்து இருக்கின்றாய்” என்று கேட்டாள். ஆரம்பித்தான் ஞானசீலன்.

நான் ஒரு மாதா பக்தன். பல வருடங்களாக நீரழிவு வியாதியினால் பாதிக்கப்பட்டவனாக இருக்கின்றேன். இப்படி இருந்தும் அடிக்கடி இந்த ஆலயத்திற்கு வந்து மாதாவிடம் என் குறைகளைச் சொல்லி கவலை போக மாதாவோடு பேசி விட்டு போவது வழக்கம். அதேபோல் கடந்த வாரமும் இங்கு வந்து என் குறைகளை போக்கித் தரும்படி அழுது கேட்டுவிட்டுப் போனேன். ஆனால் மூன்று நாட்களில் நான் சுகம் கண்டு கொண்டேன். எனவே தான் இன்று இங்கு வந்து அம்மாவுடன் பேசி நன்றி கூற வந்தேன் என்று கூறினான் அவன்.

அதைக் கேட்டதும் அந்தப் பெண் அவனின் இரு கைகளையும் பற்றிப் பிடித்தபடி You are the spiritual man என்று அவன் முகத்தைப் பார்த்தபடி கூறினாள்.

ஞானசீலனோ பயந்து போனான். No Madam I am a poor man என்று நெஞ்சு படபடக்க கூறினான். No you are the spiritual man என்றாள் அந்தப் பெண். No madam I am a poor man என்று மீண்டும் நான் சொல்ல அந்தப் பெண் Yes You are that spiritual man என்று மூன்று முறைகள் சொல்லவும். ஞானசீலன் அதை ஏற்றுக்கொள்ள மறுக்கவே அவள் தொடர்ந்தாள்.....

இன்று காலை முதல் திருப்பலிக்கு வந்தேன். திருப்பலி முடிந்ததும் வெளியே போக வாசல் வரைக்கும் வந்தேன். ஏதோ ஒரு அசரீத வார்த்தை என் காதுகளில் கேட்டது. பெண்ணே மீண்டும் ஆலயத்தினுள் போ. அங்கு ஒரு (புண்ணியவான்) மனிதன் வருவார். அவரோடு நீ பேசு, பின் உன் இடத்திற்குப் போ. இந்த வார்த்தைகளைக் கேட்டதும் ஆலயத்தினுள் வந்தேன் என்றாள் அந்தப் பெண்.

# போற்றுவோம் என்றும் புனிதர் விழாக்களை!

அன்புள்ளம் கொண்ட அன்னைத் திருஅவை
ஆளுக்கொரு புனிதரை அளித்திடல் நமக்கு.
இன்புறும் நினைவை இதயத்தில் நிறுத்த
என்பதை உணர்ந்து என்றென்றும் மகிழ்வோம்!
துன்பங்கள் நம்மைத்துரத்திடும் போதும்
தொல்லைகள் வந்து துயர் தரும் பொழுதிலும்
பன்முனைத் தாக்குதல் பயம் தந்து நம்மை
பாரினில் வாட்டி பதட்டத்தைக் கொடுப்பினும்

கவலையே வேண்டாம் கடவுள் நமக்கு
காலத்தே கொடுத்த கருணையின் புனிதர்கள்
பவம் தனைப் போக்கி பரிசுத்தராக்கி
பண்புடன் வாழ பயிற்சியும் தருவர்.
அவப்பெயர் நீக்கி ஆறுதல் அளித்து
அவனியில் நாளும் அருளுடன் வாழ
தவம் செய்திடுவர்! தாங்கியே பிடிப்பர்
தவற்றினைத்தடுக்க தரும் துணை கேட்போம்!

திருப்பெயர் போற்றி தினமும் செபிப்போம்!
திண்ணமாய் நம்மைத் தேற்றிட வருவார்!
அருட் குரல் தந்து ஆபத்தைக்களைந்து
அன்பின் கருவியாய் அணைத்து மகிழ்வார் !
கருவினில் நம்மைக் கனிவுடன் காத்த
கடவுள் நமக்கு கருணையில் அளித்த
பெரும் புனிதர் நம்மை பேணுவார் உறுதி!
பெற்ற கொடையிது பெரிதும் புகழ்வோம்!

நம் பெயர் காவலர் நாளினில் நினைந்து
நற்செயல் செய்வோம் நல்லோர் போற்ற!
செம்மையாய் இந்தச் செகத்தினில் வாழ்ந்தால்
சேவையில் நம்மைச் செழிப்புடன் கரைத்தால்
இம்மையும் மறுமையும் இனிதாய் காக்கும்
இறைவன் நமக்கு இன்னருள் பொழிவார் !
தம்மையே தந்து இத் தரணியைக் காக்கும்
தாயுளம் கொண்ட தனயனில் வாழ்வோம்!

மற்றவர் பெயரையும் மனத்தில் இருத்தி
மகிழ்ந்து அவர்கள் மனம் நிறை வாழ்த்தினை
உற்ற நல் முறையில் உண்மையில் அளித்தவர்
உயர்ந்திடச் செய்வோம் ! உலகினை வெல்வோம்!
பெற்ற நல் வாழ்வைப் பிறருடன் பகிர்ந்து
பெரும் பயனடைவோம் பேரருள் பெறுவோம்!
கற்றநம் பண்பைக் கவினுற வளர்த்து
கடமை போற்றி முக்காலமும் வாழ்வோம்!

மறையாசிரியர் தி.ம. சந்தியாகு,
வேங்கிடக்குளம் இந்தியா

பின், நீ எங்கிருந்து வருகிறாய்? ஏனக் கேட்க, நான் பாரீசில் இருந்து வருகின்றேன். நான் இலங்கைத் தமிழன் என்றான் ஞானசீலன்.

“ நான் ஒரு அமெரிக்கப் பெண். தற்சமயம் நான் ஜெருசலேமில் இருந்து வந்துள்ளேன். நான் அந்த மனிதனைப் பார்த்துப் பேசிவிட்டேன். நான் மீண்டும் என் வீடு ஜெருசலேமிற்கே போகின்றேன்.” என்றாள் அந்தப் பெண்.

ஞானசீலனோ அவள் தன் கைகளைப் பற்றிப் பிடித்தபடி இருப்பதை உணர்ந்தவனாய் பயத்தில் திருப்பலியில் கவனம் செலுத்தவில்லை. பீடத்தில் குருவானவர் அப்பத்தையும், இரசத்தையும் ஆண்டவருக்கு பலிப்பொருளாய் காணிக்கை கொடுத்துக் கொண்டு இருந்தார். தலை குனிந்தபடி இருந்த ஞானசீலன் தலை நிமிர்ந்து பார்த்தான். பக்கத்தில் இருந்த அந்தப் பெண்ணைக் காணோம். பின் பக்கம் இருந்த அவளது வயதான கணவரையும் காணோம்.

ஒரு நிமிட நேரம் என் அருகில் இருந்த அந்த இரண்டு பேரும் எங்கே போனார்கள்? யார் இவர்கள்? மனம் கலங்கிப் போய் உங்களிடம் கேட்கின்றேன். சொல்லுங்கள். **“ யார் அந்தப் பெண்?”**

நன்றி
ஞானம் பீரிஸ்




இந்த மலர் நியூசிலாந்தில் பூர்வீகமானது. புனித வாரத்தில் மட்டுமே செழித்து வளரும். இது கிறீஸ்துவின் இரத்தம் என்று அழைக்கப்படுகிறது. மலரின் மையத்தில் உள்ள சிலுவையைக் கவனியுங்கள். இது கிறீஸ்துவின் ஒளி என்று அழைக்கப் படுகிறது. அதைப் பார்க்கும் போது மெதுவாகச் சொல்லுங்கள். இயேசுவே என் குடும்பத்திற்கு வெளிச்சம் தந்தருளும். உம் மிகவும் விலையுயர்ந்த இரத்தத்தால் ஞானம் பெற எனக்கு அருளும் ஆமென்.

## சிரி.....சிரி.....சிரி....



**நபர்1: ஹோட்டலில் சாப்பிட்டுவிட்டுப் பார்க்கிறேன், கையில் காசு இல்லை.....**
**நபர் 2: அய்யய்யோ... அப்புறம் என்ன பண்ணுனீங்க?**
**நபர்1: அப்புறம் பாக்கெட்’ல இருந்து எடுத்துக் கொடுத்துட்டேன்....**

# புனிதர் தேவசகாயம் பிள்ளை (தை 14)



அருட்பணி. ஜெயக்கொடி

**மனைவியின் திருமுழுக்கு (தொடர்ச்சி)**

திருமுழுக்கு பெற்ற தேவசகாயம் தன்னுடைய மனைவி பர்கவியம்மாவையும் வடக்கன்குளம் அழைத்து சென்று அவரும் கத்தோலிக்க கிறிஸ்தவத்தை "ஞானப்பூ" என்ற பெயரில் திருமுழுக்கு பெற்றார். **(தெரசா என்பதன் தமிழாக்கம்)**

**மனமாற்றம்**

நீலகண்டன் கிறிஸ்தவராக மாறிய செய்தி கேட்டு மன்னர் ஆச்சரியப்படுகின்றார். தான் பெற்றுக்கொண்ட திருமுழுக்கை நினைவில் கொண்டு படைவீரர்களும் கத்தோலிக்க கிறிஸ்தவ நம்பிக்கையை பெற்றுக் கொள்ள கடினமாக உழைத்தார். "கலப்பையில் கை வைத்தபின் திரும்பி பார்க்ககூடாது" என்பதை தன் உள்ளத்தில் இருத்தி சிந்தித்த தேவசகாயம் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டபின், இந்து மத வழிபாட்டில் கலந்து கொள்வதை தவிர்த்து ஆலயம் சென்று திருப்பலியில் பங்குபெற்று நற்கருணை உட்கொள்ளும் வழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டார்.

கத்தோலிக்க கிறிஸ்தவத்தை ஏற்றுக்கொண்டதால் ஏராளமான அவமானங்களுக்கும், துன்பங்களுக்கும் தேவசகாயம் உட்படுத்தப்பட்டார். அவர்மீது ஏராளமான பொய் குற்றச்சாட்டுகள் புனையப்பட்டன. தேவசகாயம் ஏராளமான மனிதர்களை மதம் மாற்றிக் கொண்டிருக்கிறார். எனவே அவரை உடனே கைது செய்யவில்லை என்றால் மன்னர் பின்பற்றி வரும் மதம் அழிந்து போய்விடும் என மன்னரிடம் பொய் உரைத்தபோது அதை உண்மையென நம்பி மன்னன் அவசரமாக ஆணை பிறப்பித்தார். தேவசகாயம் திரு-முழுக்கு பெற்று நான்கு ஆண்டுகள் கடந்த நிலையில் 1749-ஆம் ஆண்டு பிப்ரவரி 23-ஆம் நாள் கைது செய்யப்பட்டார்.

**சிறையில் தேவசகாயம்**

கைது செய்யப்பட்ட தேவசகாயம் மன்னரின் முன் நிறுத்தப்பட்டார். அவர் கத்தோலிக்க கிறிஸ்தவ நம்பிக்கையை மறுதலிக்க கேட்டுக்கொண்டார். மறுதலிக்க மறுத்தால் மிகக் கொடுமையான தண்டனைக்கு உட்படுத்தப்படுவது உறுதி என அரசர் எச்சரித்த பின்பும் தேவசகாயம் கடுகளவும் தன் நம்பிக்கையிலிருந்து பின்வாங்கவில்லை.

இயேசுவின் பாடுகளை வாழ்வில் சந்தித்த வீர மைந்தன் கிறிஸ்துவுக்காக உயிரை கொடுக்க வேண்டிய சூழல் ஏற்பட்டாலும் ஒருபோதும் கிறிஸ்துவை மறுதலிக்க மாட்டேன் என்பதில் மிக உறுதியாக இருந்தார், நம் மறைசாட்சி தேவசகாயம். கடும் கோபம் கொண்ட அரசன் தேவசகாயத்தை சிறையில் அடைக்க கட்டளையிட்டான். சிறையில் அடைக்கப்பட்டிருந்த தேவசகாயத்திற்கு மரண தண்டனை நிறைவேற்ற ஆணை பிறக்கப்பட்டது. நம் மறைசாட்சியை மரண தண்டனை நிறைவேற்றும் இடத்திற்கு அழைத்து சென்றார்கள்.

எருக்கம் பூ மாலை அணிவித்து பதினாறு நாட்கள் கால்நடையாக நடக்கவைத்து அவரை துன்புறுத்தினார்கள். இக் கொடு மையைத் தொடர்ந்து எருமையின் மீது ஏற்றி கைகளை பின்புறமாக கட்டி அமர சொல்லி எள்ளி நகையாடி, முட்கள் நிறைந்த கம்பால் அவரைத் தாக்கி கொடுமைப்படுத்தினார்கள். காயம் ஏற்பட்டு இரத்தம் வழிந்த நிலையில் உடலில் மிளகு தூள் பூசி கொடும் வெயிலில் நிற்க வைத்து மிகவும் சித்ரவதை செய்தார்கள். எல்லா துன்பங்களையும் மிகவும் மகிழ்ச்சியுடனும், பொறுமையுடனும் ஏற்றுக் கொண்டார்.


திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் எவரும் கிறிஸ்தவத்தை தழுவக்கூடாது என்பதற்காகவும், எல்லாருக்கும் பாடமாக இருக்கும் பொருட்டு தேவசகாயம் ஒவ்வொரு இடங்களுக்கும் இழுத்துச் செல்லப்பட்டு துன்புறுத்தப்பட்டார். அவ்வாறு அவரை இழுத்து சென்ற பொழுது புலியூர்குறிச்சிக்கு வந்தபொழுது மிகவும் களைப்பால் தாகமுற்றார். ஒவ்வொருவரிடமும் குடிப்பதற்கு தண்ணீர் கேட்ட நிலையில் யாரும் கொடுப்பாரில்லை. தந்தையாம் கடவுளிடம் கண்ணீரோடு செபித்து தன் முழங்கை முட்டால் பாறையில் இடிக்க அதிசயமாக பாறையிலிருந்து நன்னீர் சுரந்தது. வீர மைந்தன் தாகம் தீர தண்ணீர் குடித்தார். இன்று அந்த பாறை முட்டிச்சான் பாறை என்று அழைக்கப்படுகிறது.

கொலைக்களத்திற்கு இழுத்து செல்லப்படும் கத்தாத செம்மறியாகிய கிறிஸ்துவைப் போன்று இவரும் இழுத்து செல்லப்பட்டார். புலியூர்குறிச்சியிலிருந்து பெருவிளைக்கு இழுத்து செல்லப்பட்டு வேப்பமரம் ஒன்றில் மிக இறுக்கமாக கட்டி வைக்கப்பட்டார். அவரை அமரவும், துங்கவும் விடாமல் ஏறக்குறைய ஏழு மாதங்கள் துன்புறுத்தினார்கள்.

**ஆரல்வாய்மொழி சிறையில்**

இறுதியாக ஆரல்வாய்மொழிக்கு இழுத்து செல்லப்பட்டு அங்குள்ள சிறையில் அடைக்கப்பட்டார். இப்பகுதி மலை பகுதியாக இருந்ததாலும், மக்கள் நடமாட்டம் இல்லாத பகுதியாக இருந்ததாலும், யாருக்கும் தெரிய வேண்டாம் என்பதற்காகவும், இரகசியமாக அவரை கொலை செய்ய வேண்டும் என்ற கட்டளையை நிறைவேற்றவும் இங்கு இழுத்து வந்தார்கள். தேவசகாயம் ஆரல்வாய்மொழியில் இருப்பது மக்களுக்கு தெரிய வந்தது. பல்வேறு இடங்களிலிருந்தும் மக்கள் வந்து அவரை சந்தித்து சென்றார்கள். தேவசகாயத்தின் மனைவி பர்கவியம்மாவும் தேவசகாயத்தை சந்திக்க வந்தார்.

தொடரும்....



மறைசாட்சி தேவசகாயம்
ஒரு சகாப்தம்

# எளிய முறையில் குழந்தை வடிவில் பிறந்த கடவுள்

அம்புறோஸ் பீற்றர் மறையாசிரியர்.



உலகில் முதல் முதலாக மின்விளக்கைக் கண்டு பிடித்த தோமஸ் அல்வா எடிசன் 999 முறை முயன்றும் தோற்ற நிலையில் கடின முயற்சிக்குப் பிறகு 1000 ஆவது முறையாக மின்விளக்கின் வெளிச்சத்தைக் கண்டு பிடித்தார். தான் மின் விளக்கின் ஒளியைக் கண்டு பிடித்த மகிழ்ச்சியை யாரிடமாவது சொல்லி மகிழ வேண்டும் என நினைத்தவர் அருகில் உறங்கிக் கொண்டிருந்த அன்பு மனைவியை எழுப்பி "நான் மின் விளக்கு ஒளிரும் விதத்தைக் கண்டு பிடித்துவிட்டேன்" என்றாராம். அதற்கு அவரின் மனைவி "ஆமாம் இது ரொம்ப முக்கியம் மின் விளக்கை அணைத்துவிட்டு முதலில் துாங்குங்கள்" என்றாராம்.

கடவுள் தம் மக்களை பாவம் என்னும் இருளில் இருந்தும், அடிமை வாழ்விலிருந்தும் விடுவிக்க தொடக்க காலம் முதல் பல இறைவாக்கினர் வழியாக முயற்சித்தார். ஆனால் நாம் வாழுகின்ற இந்தக் காலத்தில் தன் ஒரே மகன் வழியாக அந்த மீட்பு என்னும் பேரொளியை அளிக்கின்றார். ஆனால் நாமோ அவரது அன்பை உதறித் தள்ளிவிட்டு இன்னும் உறங்கிக் கொண்டிருக்கின்றோம் என்றுதான் சொல்ல வேண்டும்.

இஸ்ராயேல் மக்கள் கடவுளால் தேர்ந்துகொள்ளப்பட்ட மக்கள், ஆனால் பாவம் என்ற போக்கில் வாழ்ந்த அவர்கள் விடுதலையை எதிர்பார்த்தவர்களாக வாழ்ந்தார்கள். மேலும் பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்டு அடிமைகளாக வாழ்ந்தார்கள். இத்தகைய இக்கட்டான சூழ்நிலையில் கிறிஸ்து என்ற தன் மகனின் வழியாக மீட்பு உண்டு என்று கூறுகின்றார். நீங்கள் என்னை விட்டு விலகிச் சென்றாலும் நான் உங்களைத் தேடி வந்து விடுவிப்பேன். அதுவும் 'பணமின்றி மீட்கப்படுவீர்கள்' (எசா, 52:3) என்று வாக்குறுதி அளிக்கின்றார்.

கடவுள் தன்னுடைய அன்புப் பிள்ளைகள் கொத்தடிமைகளாக வாழ்வதைக் கண்டு மனமிரங்குகிறார். ஒரு நொடிகூடத் தான் மக்களை மறக்காமல் கடவுள் மீட்பின் ஒளியை, விடுதலை என்னும் ஒளியைத் தன் மக்களுக்கு அளிக்க, தானே முன் வந்து குழந்தை வடிவில் எளிய முறையில் பிறக்கின்றார். குழந்தை வடிவில் பிறந்த கடவுள் இறந்தோரின் கடவுள் அல்ல, மாறாக வாழ்கின்ற கடவுள். அவரிடம் இருக்கின்ற வாழ்வுதான் இன்று மனிதர்களாகிய நம் அனைவருக்கும் ஒளியாக இந்தச் சிறிய குடிலில் பிறந்துள்ளது. கடவுள் மனிதராய் பிறந்தது மானிட குலத்திற்கே மாபெரும் கொடையாக அமைந்துள்ளது. பல முறை பல வழிகளில் இந்த மீட்பு என்னும் ஒளியை, வாழ்வு என்னும் ஒளியை அளிக்க முயன்ற கடவுள் தன் ஒரே மகனை உலகிற்கு அளிக்கின்றார். இது கடவுள் உலகின் மீது வைத்திருந்த அன்பை வெளிப்படுத்துகின்றது.

வசதியான குடும்பத்தில் பிறந்தால் வாழலாம் என்ற மனிதக் கண்ணோட்டத்தை முறியடித்து அனைவராலும் மிகவும் சிறியதாகக் கருதப்பட்ட யூதா நாட்டில் இருந்த ஒரு சிறிய ஊரான பெத்லேகேமில் ஒரு மாட்டுத் தொழுவத்தை அதாவது தன்னுடைய அன்பு மக்களை மீட்க 'மடமை என உலகம் கருதுபவற்றைக்' கடவுள் தேர்ந்து கொண்டு மீட்பின் ஒளியை குழந்தை வடிவில் உலகிற்கு அளிக்கின்றார். கடவுளின் மீட்பைக் காண ஞானிகள் பலர் காத்திருந்தனர். ஆனால் கடவுளோ சற்று வித்தியாசமாக சமுதாயத்தில் கடை எல்லையில் உள்ளவர்களுக்குத் தன்னை வெளிப்படுத்துகின்றார்.



"காரிருளில் நடந்து வந்த மக்கள் பேரொளியைக் கண்டார்கள்"(எசா. 9:2)

என்ற வார்த்தைக்கேற்ப இடையர்கள் கடவுளின் மாபெரும் மீட்பின் ஒளியைப் பெற்றுக்கொள்கின்றனர். அன்று பாலனாகப் பிறந்த இயேசு தன் பணி வாழ்வில் பாவிகளையும், நோயாளிகளையும், சமுதாயத்தால் ஒதுக்கப்பட்டவர்களையும் தானாகத் தேடினார். இதனால் அன்று எசாயா முன்னறிவித்த மீட்பின் பேரொளியை மக்கள் பெற்று புதுவாழ்வைப் பெற்றவர்களாய், புத்துயிர் பெற்றவர்களாய், கடவுளைத் தங்கள் உள்ளத்தில் ஏந்தியவர்களாய் மகிழ்ச்சியான வாழ்வை வாழ்ந்தார்கள்.

அடிமைத்தனத்திலும் பாவ வாழ்விலும் வாழ்ந்த மக்களுக்கு வாழ்வு அளித்த ஒளியாம் பாலன் இயேசு, இன்று நமது உள்ளங்களில் பிறக்க நம்மைத் தேடி வருகின்றார். நமது பதில் என்ன? அன்று மாட்டுக் குடிலில் பிறந்த அதே பாலன் இயேசு, இன்று பாழடைந்து போன நமது உள்ளம் என்னும் குடிலில் ஒளியேற்ற வருகின்றார். நாமோ கடவுளுக்கு இடம் கொடுக்க மறுக்கின்றோம். காரணம் நாம் வலையொளி, முகநூல் போன்றவற்றைப் பார்த்து பழகிப் போன மக்களாகிவிட்டோம். அதாவது இருளுக்கும், பகலுக்கும் வித்தியாசம் தெரியாமல் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நாம் வாழ்ந்து பழகிவிட்டோம். காட்டில் பசியால் வாடுகின்ற ஒரு விலங்கின் மீது நாம் பரிதாபப்பட்டு வீட்டுக்குக் கொண்டு வந்து என்னதான் உணவு கொடுத்தாலும் அது வீட்டில் தங்காது திரும்பத் திரும்ப காட்டுக்குத்தான் செல்லும். அவ்வாறே நாமும் இருக்கின்றோம்.

உலகம் மடமை என்று ஒதுக்கியவற்றை கடவுள் தேர்ந்து கொண்டு தன் வாழ்வை, மீட்பை அளிக்கினாறார்.

************************

# இறைமகனை ஈன்றெடுக்க தேவமாதா கருவுற்ற புனித தினம்...



## புனித மரியாவின் அமல உற்பவ விழா!

கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் "முக்கால கன்னி" என்று பெருமையோடு வணங்கும் புனிதத்தன்மை கொண்டவர் தேவமாதா மரியன்னை. இதை புனித பைபிளும் "இறைமகன் இயேசு பிரான் பிறப்பதற்கு முன்பும், அவரைக் கருவில் தாங்கிய பொழுதும், அவரைப் பெற்றெடுத்த பிறகும், பிதாவின் அருளால் கன்னிமை குன்றாமல் பாதுகாக்கப்பட்டவர்" என்று இவரைப் போற்றுகின்றது. கன்னிப் பெண்ணான தேவமாதா இறையருளால் இறைமகனை ஈன்றெடுக்க கருவுற்ற புனித தினம் (டிசம்பர் 8). இது புனித மரியாவின் அமல உற்பவ விழா என்றும் உலகெங்கும் கொண்டாடப்படுகிறது.

### புனித மரியா புனித மரியா

ஜெருசலேம் நகரில் பிறந்த மரியாளின் பிறப்பை, இறைதூதர் மரியாளின் பெற்றோர்களுக்கு முன்பே அறிவித்தார் என்கிறது வேதாகமம். இதனால் மனம் மகிழ்ந்த மரியாளின் பெற்றோர் பிறக்கப்போகும் குழந்தையை ஜெருசலேம் ஆலயத்தில் அர்ப்பணிப்பதாக நேர்ந்து கொண்டனர். மரியாள் பிறந்ததும் இறைதூதர் சொன்னபடியே மரியா: அதாவது கடலின் ஒளிமிக்க நட்சத்திரம் என்று பெயரிட்டனர். வேண்டிக் கொண்டபடியே மரியாவுக்கு 3 வயது ஆனபோது, ஜெருசலேம் ஆலயத்தில் அர்ப்பணித்தனர். கல்வியின் மீது கொண்ட ஆவலால் மரியா எபிரேய எழுத்துக்களைக் கற்றுக்கொண்டார். பைபிளின் பழைய ஏற்பாட்டு நூல்களைக் கற்று, இறைவனான மெசியாவின் வாக்குகளை அப்படியே கடைப்பிடித்து ஒழுக்கமாகவும் இறைவனுக்குக் கட்டுப்பட்டும் வாழ்ந்தார். இறைவனைத் துதிக்கும் பாடல்களைப் பாடுவதிலும் தேவாலயத்துக்குத் தேவையான திரைச் சீலைகளை நெய்வதிலும் மனம் மகிழ்ந்து வாழ்ந்தார் மரியா.

இறைவனை ஆராதிப்பதில் நிகரற்று விளங்கிய மரியாவை ஜோசப்புக்கு மணம் முடிக்க திருமண ஒப்பந்தம் செய்யப்பட்டு இருந்தது. இந்த வேளையில்தான், மரியாளின் பிறப்பைப் போலவே, இறைமகன் இயேசுவின் பிறப்பும் மரியாவிடம் அறிவிக்கப்பட்டது. இறைதூதர் கபிரியேல் மரியாவுக்கு முன் தோன்றி, "அருள் நிறைந்த மரியே வாழ்க! தேவன் அருளால் மாசற்ற விதத்தில் கருவுற்று ஒரு மகனைப் பெறுவீர். அவருக்கு இயேசு என்று பெயரிடுவீர். அவரே உன்னத கடவுளின் மகன் எனப்படுவார். அவருடைய மகிமை மிகுந்த ஆட்சிக்கு முடிவே இருக்காது!" என்று ஆசிர்வதித்தார்.

### மரியாவின் அமல உற்பவ விழா மரியாவின் அமல உற்பவ விழா

திருமணம் ஆகாத தனக்கு கரு உண்டானால், அது பிரச்சனை ஆயிற்றே என்று மரியாள் தவிக்க, "மரியாளின் உறவினராகிய எலிசபெத்தும் தன்னுடைய முதிர்ந்த வயதில் இறைவனின் ஆசியால் கருவுற்று இருப்பதாகவும், கவலை வேண்டாம்!" என்றும் சமாதானம் சொல்லப்பட்டது. இதனால் மகிழ்ந்த தேவமாதாவான அன்னை மரியாள் இறைசித்தப்படி கருவுற்றாள். இந்த நாள் ஆகஸ்ட் 8—ம் நாள் என்று ஒவ்வொரு ஆண்டும் கத்தோலிக்கத் திருச்சபையால் **"மரியாவின் அமல உற்பவ விழா"** என்று கொண்டாடப்படுகிறது.

ஆரம்பத்தில் கி.பி. 5—ம் நூற்றாண்டில், டிசம்பர் 9—ம் நாள் தூய அன்னை விழாவாக சிரியாவில் கொண்டாடப்பட்டது என்கிறது வரலாறு. பிறகு 7—ம் நூற்றாண்டில், ஐரோப்பியத் திருச்சபையின் சார்பில் இவ்விழா அதிகாரப்பூர்வமாக கடைப்பிடிக்கப்பட்டது. பிறகு 8—ம் நூற்றாண்டில், இவ்விழா டிசம்பர் 8—தேதிக்கு மாற்றப்பட்டு கொண்டாடப்பட்டது. 11—ம் நூற்றாண்டில், அன்னை மரியாள் இறைவனின் விருப்பப்படி இறைமகனை ஈன்றெடுத்தார் என்ற கருத்து உலகெங்கும் உருவானது. இதனால் 1476—ம் ஆண்டு, கத்தோலிக்க தலைமை திருத்தந்தை அறிவுரைப்படி அன்னை மரியாவின் அமல உற்பவத் திருவிழா உலகெங்கும் கொண்டாடப்பட்டது. இதற்கு சான்றாக உலகெங்கும் பல நாடுகளில் அன்னை மரியாளை சாட்சியாக தரிசனம் செய்த பல மக்கள் இறைமகனின் புனித அன்னையை ஆராதித்தார்கள். 1858—ம் ஆண்டு பிரான்சு நாட்டில் லூர்து அன்னையாக திருக்காட்சி அளித்த மரியன்னை, "நானே அமல உற்பவம்" என்று அருளாசி செய்தார். கத்தோலிக்க மக்களின் பெரும் நம்பிக்கையாக விளங்குபவர் அன்னை மரியாள்.

ஏழைகளுக்கு இரங்குவதிலும், அவர்களுக்கு வல்லமை அளிப்பதிலும், வரப்பிரசாதம் வழங்குவதிலும் சிறந்தவர் என்று போற்றப்படுகிறார். தேவனைக் குறித்து எவர் கண்ணீர் விட்டு மன்றாடினாலும் அநேக முறை அவர்களிடையே தோன்றி அருள் செய்த பெருமைக்கு உரியவர் அன்னை மரியாள்.

### அன்னை மரியாள் அன்னை மரியாள்

மேலும் இறைமகனான இயேசுபிரானின் புரட்சிகரமான வாதங்களால் அப்போதைய பழைமை வாதிகளால் சொல்லொண்ணா துன்பங்களையும் வசைச் சொற்களையும் எதிர்கொண்டார் மரியாள். காலம் முழுக்க இயேசுவுக்காக அவர் பல தியாகங்களை எதிர்கொண்டார். "அருள் நிறைந்த மரியே" என்று இறைதூதர் வழிமொழிந்தாலும், வாழ்ந்த காலம் முழுக்க இயேசுபிரானுக்காக எந்த அற்புதங்களையும் செய்யாமல் பொறுமை காத்தார். பெண்களுக்குள் புகழ் கொண்டவராக, தியாகம் நிறைந்தவராக வாழ்ந்ததால், உலகமெங்கும் உள்ள கத்தோலிக்க கிறிஸ்தவர்கள்

உலகமெங்கும் உள்ள கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் தங்களது வேண்டுதல்களை அன்னை மரியாளின் வழியாகவே சொல்லி மன்றாடி வருகிறார்கள். இறைவனுக்காகத் தன்னை தாழ்த்திக்கொண்டு மகிமை கொண்டவர் தேவமாதா. தேவகுமாரனின் தாயானபோதும், அவர் எப்போதுமே தமக்காக ஒன்றுமே ஆண்டவரிடத்தில் கேட்காத தியாக குணம் கொண்டவர். அவரை ஆராதிப்பதும், ஆண்டவரை ஆராதிப்பதும் ஒன்றே என்பார்கள் கத்தோலிக்க மக்கள். தூய ஆவியாலே கருவுற்று இறைமகனை ஈன்றபோதிலும் ஏழ்மையான குணவதியாகவே வாழ்ந்தவர் அன்னை மரியாள்.

**தேவமாதா தேவமாதா**

புனித மாதாவே, தருமத்தின் தாயகமே, ஞானத்தின் இருப்பிடமே, தியாகத்தின் பிறப்பிடமே, எங்களுக்காக எங்கள் பிரார்த்தனைகளை செவிமடுத்து அருள் செய்ய வேண்டும் தாயே! பாவங்களில் இருந்து எங்களை இரட்சித்து, எங்களின் தேவைகளை அறிந்து அதை நியாயமாக வழங்க உங்களை மன்றாடுகிறோம். பெண்களில் உயர்ந்தவரான தேவமாதாவே! உம்மை எங்கள் பிராத்தனைகளால் மகிமைப்படுத்துகிறோம். எப்போதும் எங்களுடன் துணை இருக்கவும். ஆமென்

## மூவேளை செப உரை 18.09.2022



மனத்தாராளம், பகிர்வு, மற்றும் நம்மிடம் இருப்பதைக் கொண்டு பிறருக்குப் பணிபுரிதல் வழியாக, உடன்பிறந்த உணர்வு உறவுகளைக் கட்டியெழுப்பவேண்டும் என, நம் ஆண்டவர் இவ்வுவமை வழியாக மற்றுமொரு பாடத்தை நமக்களிக்கின்றார் என்றுரைத்த திருத்தந்தை, முதலில் நேர்மையற்று நடந்துகொண்ட அந்த வீட்டுப்பொறுப்பாளர், பின்னர் பகிர்தலின் வழியாக எவ்வாறு நண்பர்களைச் சம்பாதித்துக்கொண்டார் என்றார். எனவே நிலைவாழ்வைச் சுதந்தரித்துக்கொள்ள இவ்வுலகின் பொருள்களைச் சேர்த்து வைக்கவேண்டிய தேவையில்லை, ஆனால், இவ்வுலகப் பொருள்களை நமக்கு மட்டுமே என்றில்லாமல், பிறருக்கும் பயன்படுத்தும் உடன்பிறந்த உணர்வின் உறவுகளால் வெளிப்படுத்தப்படும் அன்பே அவசியம் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், கூறினார். நேர்மறை எண்ணம் இன்றும் ஊழல், நேர்மையற்ற நடத்தை, அநீதியான கொள்கைகள், தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களின் தெரிவுகளை ஆதிக்கம்செய்யும் தன்னலம், மேலும் பல இருளான சூழல்கள் ஆகியவற்றின் கதைகளைக் கேட்கிறோம், ஆயினும், கிறிஸ்தவர்களாகிய நாம், இவற்றால் சோர்வடையக் கூடாது, அல்லது, அதைக் கண்டுகொள்ளாமல் இருக்கக் கூடாது என்று திருத்தந்தை கூறினார். இவ்வுலகப் பொருள்களை மட்டுமன்றி, ஆண்டவரிடமிருந்து பெற்றுள்ள கொடைகள் அனைத்தையும் நற்செய்தி கூறும் முன்மதி மற்றும், செயல்திறனோடு நல்லவை செய்வதில் படைப்பாற்றலோடு இருப்பதற்கு நாம் அழைக்கப்பட்டுள்ளோம் என்றும், இந்த நம் முயற்சியில் புனித கன்னி மரியா உதவுமாறு அவரது பரிந்துரையை வேண்டுவோம் என்றுரைத்து மூவேளை செப உரையை நிறைவுசெய்தார்,

## இலங்கையின் புதிய மாகாணத் தலைவர்



நற்கருணைநாதர் துறவற சபையின் இலங்கைக்கான புதிய மாகாணத்தலைவராக அச்சபையை சேர்ந்த அருட்திரு யஸ்ரின் சொவ்கான் அவர்கள் நியமனம் பெற்று தனது பணிப்பொறுப்பை 17 ஆம் திகதி சனிக்கிழமை இன்று ஏற்றுக் கொண்டார்

கொழும்பில் உள்ள சபையின் தலைமையகத்தில் சபையின் தலைவர் முன்னிலையில் அருட்திரு யஸ்ரின் சொவ்கான் அவர்கள் தனது பணிப்போறுப்பை ஏற்றுக் கொண்டுள்ளதுடன் வருகின்ற நான்கு வருடங்களுக்கு இப்பொறுப்பிலிருந்து இவர் பணியாற்றவுள்ளார்.



# அனைத்து புனிதர் பெருவிழா (நவம்பர் 1)



இறைவனுக்காக தன் உள்ளத்தையும், உடலையும் அர்ப்பணித்துத் துன்பங்களை, இன்பங்களாக ஏற்றவர்கள் உலக மாந்தர்களின் நலனுக்காகவும், அவர்கள் நெறிபிறழாமல் வாழ வழி காட்டியாகவும் நின்றவர்கள் தன்னலமற்று தியாக தீபங்களாக இறைவனுக்காக தன் உள்ளத்தையும், உடலையும் அர்ப்பணித்துத் துன்பங்களை, இன்பங்களாக ஏற்று வாழ்ந்து மறைந்தவர்களைத்தான் தூயவர்களாக அல்லது புனிதர்களாக அடையாளப்படுத்துகிறது கத்தோலிக்கத் திருச்சபை.

அனைத்து புனிதர் பெருவிழா என்பது பல்வேறு நூற்றாண்டு களில் பல்வேறு விதங்களில் கொண்டாடப்பட்டு வந்தாலும், எட்டாம் நூற்றாண்டில் திருத்தந்தை மூன்றாம் கிரேகோரியின் **(Pope Gregory III (731–741)** காலத்தில் நவம்பர் முதல் தேதியன்று கொண்டாடப்பட்டது. திருச்சபையால் புனித வாழ்வு வாழ்ந்த பலரை நினைவு கூறும் வண்ணம் இவ்விழா கொண்டாடப்படுகிறது. திருச்சபையின் முதல் நூற்றாண்டுகளில் திருச்சபையால் வந்திக்கப்பட்ட புனிதர்கள் அனைவரும் வேத சாட்சிகளே. வேதசாட்சிகளைத் தவிர ஏராளமான புனிதர்களும் மோட்சத்தில் புனிதர்களாக பேரின்ப பாக்கியம் அனுபவித்து வருகிறார்கள்.

இன்று நாம் மோட்சத்தில் இருக்கும் புனிதர் அனைவரையும் நினைவு கூர்கிறோம். அவர்களது மகிமையையும், மாட்சிமையையும் திருச்சபை நமக்கு எடுத்துக்காட்டுகிறது. புனிதர் பட்டம் பெற்றவர்கள் மட்டுமல்ல, எண்ண முடியாத வேறு நீதிமான்களையும் நாம் காண்கிறோம். அவர்கள் பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் வாழ்ந்தவர்கள். அவர்கள் கடவுளைப் புகழ்கிறார்கள். கடவுளுடைய செம்மறியானவரை வாழ்த்துகிறார்கள். இந்த நம் சகோதரர்களுடன் நாமும் கூடி மகிழ்வோம். புனிதரின் சமுதீத பிரயோசனத்தால் இவர்களுடன் நாம் தொடர்பு கொண்டிருக்கிறோம்.

மோட்சத்திலிருக்கும் புனிதர்கள்போல் தேவபயத்துடன் வாழ்வதுடன் கடவுளது கட்டளைகளை அனுசரித்து நடக்க வேண்டும். எளிய மனத்தோராய் சாந்த குணம், வேதனைகளில் பொறுமை, நீதி, அனுதாபம், கற்பு, துன்பங்களில் சகிப்பு என்னும் புண்ணியங்களை அனுசரிக்க வேண்டும். நமது உழைப்புகளிலும் பிரச்சனைகளிலும் இயேசுவிடமே இளைப்பாறுதல் காணவேண்டும்.

**கடவுளை யாரும் என்றுமே கண்டதில்லை** (யோவான் 1:18). ஆனால் நம்மிடையே மனிதர்களாகப் பிறந்து புனிதர்களாக மாறியவர்களின் வழியாகத்தான் இறைவன் தமது மாட்சியை வெளிப்படுத்திக்கொண்டுள்ளார். என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து, தம் சிலுவையைத் தூக்கிக் கொண்டு என்னைப் பின்பற்றட்டும் (மத்தேயு 16:24) என்ற இறைமகன் வாக்குக்கு சாட்சியாக வாழ்ந்தவர்கள் புனிதர்கள். இயேசுவின் சீடரான தூய இராயப்பர் (பேதுரு) தொடங்கி இந்தியாவின் முதல் புனிதரான புனித தேவசகாயம் வரை இறைவார்த்தையாக வாழ்ந்து மறைந்தவர்கள் புனிதர்களாக நம்மோடு இன்றும் வாழ்கிறார்கள் நமக்காக செபிக்கிறார்கள். நமக்காக பரிந்து பேசி அரும் அடையாளங்களை நமக்கு வழங்கிக் கொண்டுள்ளார்கள். தன் வாழ்நாள் எல்லாம் செபத்திலேயே கழித்த தூய தெரசாள் இறப்பதற்கு முன்பு, **என் பணி இனிமேல்தான் ஆரம்பமாகிறது** என்று கூறி விண்ணகத்தில் உலக மக்களுக்காகப் பரிந்து பேசி செபிக்கப் போவதாக அறிவித்துச் சென்றாள்.

புனிதர்கள் தங்களது வலிமையால் நற்பெயர் பெற்றார்கள். தங்களது அறிவுக்கூர்மையால் அறிவுரை வழங்கினார்கள் இறைவாக்குகளை எடுத்துரைத்து தங்கள் அறிவுரையாலும் சட்டம் பற்றிய அறிவுக்கூர்மையாலும் மக்களை நடத்தினார்கள். நற்பயிற்சியின் சொற்களில் ஞானிகளாய் இருந்தார்கள்.

அவர்கள் அனைவரும் தங்கள் வழி மரபில் மாட்சி பெற்றார்கள். தங்கள் வாழ்நாளில் பெருமை அடைந்தார்கள். அவர்களுள் சிலர் புகழ் விளங்கும்படி தங்கள் பெயரை விட்டுச் சென்றார்கள். அவர்களின் வழி மரபு என்றும் நிலைத்தோங்கும். அவர்களின் மாட்சி அழிக்கப்படாது. அவர்களுடைய உடல்கள் அமைதியாய் அடக்கம் செய்யப்பட்டன.

அவர்களுடைய பெயர் தலைமுறை தலைமுறைக்கும் வாழ்ந்தோங்கும். மக்கள் அவர்களுடைய ஞானத்தை எடுத்துரைப்பார்கள். அவர்களது புகழைச் சபையார் பறைசாற்றுவார் (சீராக் 44:1–15) என்ற தூய சீராக்கின் ஞான உரையைக் கண்ணோக்குகின்றபோது, நம் வாழ்வில் தீய எண்ணங்கள், உலக இச்சைகள், சிற்றின்பங்கள் போன்றவற்றில் சிக்கிக்கொள்ளாமல் இருக்க அவர்கள் நமக்காக வாழ்ந்தார்கள் என்பது புலனாகிறது. அவர்களின் மேன்மையை நாம் நினைக்க, சிந்திக்க வேண்டியுள்ளது.

**என் பொருட்டுத் தம்மையே அழித்துக் கொள்கிற எவரும் வாழ்வடைவார்** (மத்தேயு 16:25) என்ற இறைமகன் இயேசுவின் வாக்குக்கு உண்மை சாட்சியாக நின்ற அன்னை மரியாள், தூய சூசையப்பர், தூய இராயப்பர், தூய அந்தோணியார், தூய செபஸ்தியார், தூய சின்னப்பர், தூய அருளப்பர், தூய தெரசாள், தூய அல்போன்சம்மால் போன்றோர்களின் பெயரைச் சொல்லி **எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்** என்று அவர்களிடம் செபங்கள் மூலமாக கேட்கின்றபோது, நம் தேவைகளை நிறைவேற்றவும், நம்மை பீடித்திருக்கின்ற நோய்களை, துன்பங்களை நீக்குவதற்காகவும், நமக்காக. இறைவனிடம் நாள்தோறும் பரிந்து பேசுகிறார்கள். விண்ணகத்தில் புனிதர்கள் தங்களிடம் இறை மக்களின் செபங்கள் வரும்போது, கிறிஸ்துவின் அரியணை முன் இந்த செபக் காணிக்கையையே தூபமாக அர்ப்பணிக்கிறார்கள் (திரு. வெளி:5–8). கடவுளை வழிபடுகிற நாம், அவரோடு நெருங்கிய உறவு கொண்டு நமக்காக பரிந்து பேசுகிற புனிதர்களுக்கு வணக்கம் செலுத்துவது நமது கடமை என்பது குறிப்பிடத்தக்கது.






## மலைப்பாம்பும் மான் குட்டியும்

குறட்டி என்ற பெயர் கேட்டால் மஞ்சளாறு காட்டில் சிறுத்தைகளும், புலிகளும் கூட பயப்படும். இருபது அடிக்கும் நீளமாக மரங்களின் கிளைகளில் படர்ந்து இருக்கும் தனது அழகிய உடம்பும், கரும்புள்ளிகளும் அதற்கு பெருமை-யாக இருந்தது. கரும்பழுப்பு, பழுப்பு என்று பல நிறங்களில் மலைப்பாம்புகள் இருக்குமே தவிர. இப்படி லட்சணமான கரும்புள்ளி களுடன் பார்ப்பது ரொம்பவும் அரிது.

மலைப்பாம்புகள் பொதுவாக பறவைகள், முயல் போன்ற சிறிய பிராணிகளைப் பிடித்து உண்ணும். சில சமயம் மான் போன்ற சற்றுப் பெரிய விலங்குகளைக் கூடத் தாக்கும். ஆனால் குறட்டி சற்று வித்தியாசமானது. காட்டெருமைக் கன்று, சிறுத்தை போன்றவற்றைக் கூட தனது குறட்டிப்பிடியில் நொறுக்கி எடுத்துவிடும். அதனால் அதற்கு குறட்டி என்று பெயர் வழங்கி வந்தது.

குறட்டி தனது தலையை ஒரு கிளையின் மீது வைத்தபடி ஆற்றங்கரையையே பார்த்துக் கொண்டு இருந்தது. குறட்டி தனது தலையை ஒரு கிளையின் மீது வைத்தபடி ஆற்றங்கரையையே பார்த்துக் கொண்டு இருந்தது.

மிரண்டு மிரண்டு ஆற்றங்கரையில் வரும் மிளா மான் குட்டி அதன் கண்ணில்பட்டது. நீண்டு கிடந்த தனது உடலை வேகமாக தன்னை நோக்கி இழுத்தது.

அநேகமாக அந்த மான்குட்டி மிகவும் குறுகலாக ஓடும், அந்த ஆற்றைக் கடந்து வரலாம். அப்படிக் கடந்து வந்தால் குறட்டி இருக்கும் வழியாகத்தான் வரவேண்டும். அந்த மிளா மான் ஆற்றில் இறங்கியது. குறட்டியில் வாயில் நீர் சுரந்தது.

மீதமுள்ள குறட்டி தனது உடலை கிளையில் சுற்றி தனது தலையை மட்டும் தொங்க வைத்தபடி அசை-சயாமல் இருந்தது. பார்வை மட்டும் ஆற்றில் இறங்கிய மான் மீது இருந்தது.

ஆற்றில் மான் நீந்தியது. இதே மரத்திலிருந்துதான் குறட்டி ஒரு நாள் ஒரு சிறுத்தையை மடக்கிப் பிடித்தது. ரப்பர் போன்ற தனது உடம்பை கயிறு போல் பாவித்து இறுக்கிய வேகத்தில் சிறுத்தையின் எலும்புகள் மடமடவென்று முறிந்தன. மான் கரை யேறி விட்டது. குறட்டி அசையாமல் இருந்தது. அந்த மரத்திற்கு அருகாமையில வந்த பாதையில் சுற்றிப் பார்த்த படி நடந்து வந்தது அந்த மான். குறட்டி மான்குட்டியில் கழுத்தில் மாலையாய் விழுந்தது.


" அம்மா" என்று கதறியது மான்குட்டி. எதிர்பாராத தாக்குதலால் நிலைகுலைந்து போனது. அப்படி இப்படி கூட அசையாமல் நின்றது.

குறட்டிக்குக் கூட ரொம்ப ஆச்சரியமாக இருந்தது. குறட்டி அதன் முகத்தைப் பார்த்தது பாவமாக இருந்தது. அதற்குள் குறட்டி ரப்பர் போன்ற நீண்ட தனது உடலால் மானைச் சுற்றிது. மான் தேம்பி அழுதது. அதன் கண்களில் கண்ணீர் வழிந்தது.

குறட்டி இப்படி திடீர் தாக்குதல் நடத்தும் போது எந்த ஒரு மிருகமும் இதனிடம் தப்பிக்க போராட்டம் நடத்துமே தவிர இப்படி அழுது ஆர்ப்பாட்டம் செய்யாது.

" ஆமாம்.... ஏன் அழுகிறாய்" என்றது குறட்டி.

தொடரும்.......



எனது பெயர் அபிர்சன்.
எனது வயது பதினைந்து.
நான் வளர் தமிழ் 6 இல் படிக்கின்றேன்
எனது அப்பாவின் பெயர் யூட்.
எனது அம்மாவின் பெயர் பிரமளா.
நான் Lycee யில் படிக்கிறேன்.
எனது விருப்பமான பாடம் ஆங்கிலம்
எனது சகோதரரின் பெயர் :ஜெவ்னி.
என் பெற்றோரின் பிறந்த இடம் பாண்டியூர்
ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையிலும்
எங்கள் குடும்பத்தினருடன்.
கோவிலுக்கு செல்வேன்.

### சின்னக் கரங்களே!

இப்பகுதியை அலங்கரிக்க உங்கள் கைகளால் வரைந்த வண்ணச் சித்திரங்களை எதிர்பார்க்கின்றோம். எனவே தயங்காமல் உங்கள் சித்திரங்களை எமக்கு அனுப்ப மறவாதீர்கள்......



# செபம் செய்து உரையாடவா? உறவாடவா?



அம்புறோஸ் பீற்றர் - மறையாசிரியர்

இக் கேள்விக்கு நம்மில் பலருக்கு விடை தெரியும். ஆயினும் இதை இன்னும் கொஞ்சம் ஆழமாக சிந்தித்தோம் என்றால் அது இன்னும் பயனுள்ளதாக அமையும். உண்மையான உறவுகளின்றி, உரையாடல் நிகழலாம். அவ்வாறு நிகழ்ந்தாலும் அவை நல்ல பயன் தராது. விவிலியத்தில் ஆபிரகாமிற்கும், கடவுளுக்குமிடையே நிகழ்ந்த உரையாடலானது முதல் பரிந்துரை, மன்றாட்டு என நம்பப்படுகிறது. இம் மன்றாட்டு சாத்தியமானது ஆபிரகாம் கடவுளோடு கொண்டிருந்த உறவால்தான்.

பொதுவாக உண்மையான உறவுகள் இருக்குமிடத்தில் ஒளிவு, மறைவு என்ற பேச்சுக்கே இடமில்லை. எல்லாமே திறந்த மனப்பான்மையோடு சுதந்திரத்துடன் பரிமாறப்படும். இது மாதிரியான ஒரு பரிமாற்றம் கடவுளுக்கும், ஆபிரகாமிற்குமிடையே நிகழ்ந்தது. "நான் செய்ய விரும்புவதை ஆபிரகாமிடமிருந்து மறைப்பேனா?" என்று தன்னைத் தானே கேட்டுக்கொண்டு தனது திட்டத்தை வெளிப்படுத்துகிறார் இறைவன். ஆபிரகாமோ கடவுளிடம் அந்நகரை அழிவிலிருந்து காப்பாற்ற உரிமையுடனும் அதே சமயம் மதிப்புடனும் வாதாடுகிறார். இதன் விளைவாக "பத்து நல்லவர்கள் இருந்தால் அந்நகரை அழிக்க மாட்டேன்." என வாக்குறுதி தருகின்றார் இறைவன். இவ்வாறு இந்த உரையாடலில் திறந்த மனப்பான்மை, மதிப்பு கலந்த உரிமை இருந்தது. இவைகள் உறவின் மூலமாய் மலருகின்ற உரையாடலுக்குத் தேவை.

இது மாதிரியான செபத்தை இஸ்ராயேல் மக்களிடம் கடவுள் தொடர்ந்து எதிர்பார்த்தார். ஆனால் அவர்களோ செபத்தை உரையாடலாகச் சுருக்கி, அதனை மேலும் சடங்குகளாக மாற்றிவிட்டனர். கடவுள் தன் ஏக்கத்தைப் பல்வேறு இறைவாக்கினர் வாயியாக வெளிப்படுத்தினார். இறைவாக்கினர்களும் இறைவனின் ஏக்கத்தை பல்வேறு உவமைகள், உருவகங்கள், உறவு மாதிரிகள் வாயிலாக விளக்கினார்கள். இஸ்ராயேல் மக்கள் வணங்காக் கழுத்தினர் என இறைவனே கூறுமளவுக்குக் கடின உள்ளத்தினராய் வாழ்ந்தனர். அதிலும் சிறப்பாக தங்களுக்கென்று தெய்வங்களை ஏற்படுத்திக் கொண்டு தங்களது செபத்தை சடங்காக மாற்றிவிட்டனர்.

இந்த நிலையில் தனது ஏக்கத்தை வெளிப்படுத்த தனது ஒரே பேறான மகனை தந்தை கடவுள் அனுப்பினார். அவரும் தனது போதனையால் பழைய வீண் குருட்டுச் சடங்குகளுக்கு சாவு மணியடித்தார். தனது புதுமைகளால் உறவை இழந்து தவித்த மானிட இனத்திற்கு விடுதலை அளித்தார். தனது பாடுகள், மரணம் மற்றும் உயிர்ப்பு மூலம் மனிதம் முழுமைக்கும் உயரிய மதிப்பையும், மாண்பையும் நல்கினார். பவுலடியாரின் பார்வையில் கிறிஸ்துவின் மீட்புச் செயலானது படைப்புகளுக்கும் கூட உயர்வைத் தந்தது. இந்த மான்பில் சீடர்கள் நிலைத்து நிற்க மூன்று காரணிகளைத் தந்தார். அவையாவன தூய ஆவி, நற்கருணை, மற்றும் செபம். தூய ஆவியும், நற்கருணையும் நம்மில் செயலாற்ற நம்மை தயார்படுத்துவது தான் செபம்.

இயேசு கற்றுக் கொடுத்த செபமானது வார்த்தைகளை அடுக்கிக்கொண்டு போகும் வார்த்தை விளையாட்டு அல்ல. மாறாக இது ஒரு நோக்கு உறவுகளைக் கொண்ட ஒரு பெட்டகம். முதலாவது உறவு நாம் கடவுளோடு கொள்ள வேண்டிய மேல் நோக்கு உறவு. இந்த உறவு எப்படி இருக்க வேண்டும் என்பதையும் இந்தச் செபத்தில் காணலாம். "தந்தையே" என அழைப்பதன் மூலம் கடவுளுக்கும் நமக்கும் உள்ள உறவு "தந்தை மகன்(ள்)" உறவாக இருக்க வேண்டும் என்கிறது. ஏனென்றால் இவ்வுலகில் பெற்றோருக்கும், பிள்ளைகளுக்கும் இருக்கும் உறவை விட மிக நெருக்கமான புனிதமான உறவு உலகில் வேறு எதுவும் இல்லை. இப்படிப்பட்ட உரிமையான உன்னதமான உறவை உணர்ந்தவர்களாய்ச் செபிக்கின்றோமா? மேலும் " எங்கள் தந்தையே" என்று அழைக்க கற்றுக் கொடுத்தது இறைவன். செபத்தை சொல்பவருக்கு மட்டுமல்ல அச் செபத்தைச் சொல்லும் எல்லா மனிதருக்கும் அவர் தந்தையாக இருக்கின்றார் என்பதை விளக்குகிறது.

இரண்டாவது நாம் பிற மனிதர்களிடம் கொள்ள வேண்டிய சம நோக்கி உறவு 'எங்களுக்குத் தீமை செய்தவர்களை நாங்கள் பொறுப்பது போல எங்கள் பாவங்களைப் பொறுத்தருளும்' என்ற வரிகளின் மூலமாக இரத்தினச் சுருக்கமாக ஓர் ஆழமான உண்மையை எடுத்துரைக்கிறது இச் செபம். அதாவது நாம் பாவத்திலிருந்து விடுதலை பெறுவதும் வீணாகப் பாவத்திலே கட்டுண்டு கிடப்பதும் நம் கரத்திலே உள்ளது.

எவ்வாறெனில் நாம் பிறரை மன்னித்தால்தான் நாம் மன்னிப்பு அடைகிறோம். இதனால் என்னவோ "மன்னிக்கும் போது நாம் மன்னிப்பு அடைகிறோம் என புனித பிரான்சிஸ் அசிசியார் சொன்னாரோ? எனத் தெரியவில்லை. மண்ணில் மன்னிப்பு பெறுவதற்கு மட்டுமன்று, இன்பத்துடன் வாழ்வதற்கும் பிறரது உறவு தேவைப்படுகிறது. இவ்வாறு கிறிஸ்துவின் செபம் இரு நோக்கு உறவுகளைப் பெற்றது. ஒவ்வொரு முறையும் செபிக்கும் போது இந்த உறவுகளைப் புதுப்பித்துக் கொள்கிறோம். எனவேதான் நமது தாயாம் திருச்சபை செபத்தை உறவாடல் என்று அழைக்கின்றது.

## இலங்கைத் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப்ப
## நடாத்தப்பட்ட புனித கன்னி மா







Le Parisien

S'ABONNER

**Pèlerinage à Baillet-en-France : près de 8000 Tamouls de retour pour la messe de l'Assomption**

Plusieurs milliers de fidèles ont assisté à la messe du 15 août sur le site de Notre-Dame de France à Baillet-en-France dans le Val-d'Oise. L'événement n'avait pas eu lieu depuis 2019 en raison de la crise sanitaire.

Baillet-en-France (Val-d'Oise), ce lundi 15 août. Beaucoup de fidèles tamouls se sont rendus sur le site de Notre-Dame de France. «Je ...is que cet endroit leur rappelle un lieu de pèlerinage très prisé



மாதா தொலைக்காட்சியின் இயக்குனர் வருகை தந்தபோது







வேளாங்கண்ணி

அன்னை

திருவிழா

Sevran

பணித்தள விழா

18-08-2022

## ...பணியகத்தினால் வயல்மாதா ஆலயத்தில்
## ...ரியா பெருவிழா - 15-08-2022



















# உலகு அமைதி பெற்று வாழ




அருள் நிறை மரியே தாயே
அமலோற்பவ மாமரி நீயே
பிள்ளைகள் நாம் உம்மைத் தேடி
ஓடியே வந்தோம் நாடி

காடும் மேடும் கடந்து வந்தோம்
கடும் குளிரிலும் கடந்து வந்தோம்
கடும் வெய்யிலிலும் வெந்து நொந்து
நிந்தன் பாதம் சரணடைந்திடவே

ஆலயம் நாடி உம் செபமாலை சொல்லி
பாக்கள் பாடி உம் மலர்பாதம்
அழுது அழுது ஓடி வந்தோம்
அரவணைத்து காப்பாயே தாயே

பல்லக்கில் ஏறி எம் தோளில் தாங்கி
பக்தர்கள் நாங்கள் உம்மை ஏந்தி வந்தோம்
உம் முகம் பார்த்து தாமரைப் பாதம்
தொட்டு வணங்க தாவி வந்தோம்

உலகு அமைதி பெற்று வாழ
மாந்தரெல்லாம் மகிழ்ந்து கூட
கொடியநோயும் கொரோனாப் பேயும்
தொலைந்து போக
விடைகொடு தாயே!
விடைகொடு தாயே!!
விடைகொடு தாயே!!!

ஞானம் பீரிஸ்

## ‘ ஆன்மீகக் கொத்து’ மறையாசிரியர் அம்றோஸ் பீற்றரின் கட்டுரைத் தொகுப்பு நூல் வெளியீடு

கடந்த 25 செப்டம்பர் 2022 ஞாயிறு பிற்பகல் ஆன்மீகப் பணியக மண்டபத்தில் நடைபெற்றது. இயக்குனர் அருட்பணி போல் மத்தியு மதன்ராஜ் அமதி அவர்கள் தலைமை தாங்கினார். அருட்பணி:. யோண் பீற்றர் அடிகள் நூல் ஆய்வுரையை வழங்கினார்கள். அருட்பணி. பிரபு ராஜ்குமார் ஆசியுரை வழங்கினார். பணியகத்தின் மறையாசிரியர் திரு.சில்வெஸ்ரர் தம்பிராசா நூலாசிரியர் பணிகள் பற்றி எடுத்தரைத்தார். குறிப்பாக திரு. அம்புறோஸ் பீற்றர் அவர்கள் கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயத்தில்



அரை நூற்றாண்டுகளுக்கு மேல் பாடகர் குழுவிலும், கொழும்பு மறைமாவட்டத்தின் ‘ தாய்’ பத்திரிகையில் பத்தாண்டுகள், திருமறைக் கலாமன்றத்தின் கொழும்புப் பகுதிகளுக்கு இணைப்பாளராகவும் பணியாற்றினார்கள். 300மேற்பட்ட கிறிஸ்தவ பாடல்களை இயற்றி ஒலிநாடாவாகவும் இறுத்தட்டாகவும் வெளியிட்டுள்ளார். அதேவேளையில் நல்ல நடிகராகவும் நாட்டுக்கூத்துக் கலைஞராகவும் கலைப் பணியாற்றியுள்ளார். இலங்கை வானொலி கலைஞர்களுடனும் இணைந்து நடித்துள்ளார் என்பதனையும் குறிப்பிட்டு கூறினார்.

இயக்குனர் தலைமையில் இவர் கத்தோலிக்கரின் ஒரு நல்ல எடுத்துக்காட்டு எமக்கும் பணியகத்துக்கும் பெருமை தேடித்தந்தவர். திரு.அம்புறோஸ் பீற்றர் அப்பா கொண்டாடப்பட வேண்டியவர்கள் என்றும் தமதுரையில் எடுத்தரைத்து ஆசீரும் வாழ்த்துகளும் வழங்கினார். பலரும் இவரை பாராட்டி வாழத்துகளை தெரிவித்தார்கள். வெளிநாடுகளிலிருந்தும் ஒலிவடிவங்களில் இவரின் பணிகளைப் பாராட்டி உறவுகளும் நண்பர்களும் வாழ்த்தினார்கள். கலை நிகழ்வுகளும் இடம்பெற்றது நிகழ்வுகளை திரு ஜஸ்ரின் தொகுத்து வழங்கினார். இறுதியில் நூல்லசிரியர் அம்புறோஸ் பீற்றர் அவர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்கள்.

தகவல்: மறையாசிரியர் எஸ்.ரி. சில்வெஸ்ரர்



## யாழ்: அமலமரித் தியாகிகள் சபையின் மாகாண முதல்வர் அருட் தந்தை யூஜின் பெனடிக்ற்

ஐரோப்பிய நாடுகளுக்கு உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்ட யாழ் அமலமரித் தியாகிகள் சபையின் மாகாண முதல்வர் யூஜின் பெனடிக்ற் அடிகளாரை. இலங்கைத் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகம் பிரான்சு 11.9.22 அன்று பாரீஸ் பெல்வில் ஆலயத்தில் வரவேற்று மதிப்பளித்தது. ஒப்புரவு அன்னையின் திருவிழாத் திருப்பலியை தலைமையேற்று நிறைவேற்றிய அருட்தந்தை அவர்கள், திருவிழா முடிவில் நடைபெற்ற பணியகத்தின் அனைத்துப் பணியாளருக்குமான பொது அமர்வில் பேசுகை யில் சமயம் கடந்து, மானுட நேயத்துடனும், சமூக விழிப்புணர்ச்சியுனும், பிரான்சின் ஆன்மீகப் பணியகம் ஆற்றும் சவாலான பணிகள் சாதனை யாக்கப்பட்டிருக்கின்றன எனப் பாராட்டினார். ஒப்புரவு அன்னையின் பரிந்துரையினாலும், தூய ஆவியின் உடனிருப்பாலும் எமது யாழ் மகாண முதல்வர் அருட்பணி. யூஜின் பெனடிக்ற் அவர்களின் பணிகள் சிறக்க இலங்கை தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகம் செபங்களையும் வாழ்த்துகளையும் தெரிவிக்கின்றது.

தயா வில்லியம்

# பணியகச் செய்திகள்

**24- 12-2022 கிறீஸ்து பிறப்பு பெருவிழா**
(இரவுத் திருப்பலி)

18:00 Eglise Ste.Genivieve - 95140 Sarcelle
20:30 Basilique N.D. Perpetuel secours -
55 BD de Ménilmontant - 75011-Paris

**25– 12-2022 கிறீஸ்து பிறப்பு பெருவிழா**

12:30 Eglise St. Joseph des Nations – Paris

**31–12-2022 புதுவருட இரவுத் திருப்பலி**

21:00 Eglise St. Joseph des Nations – Paris
21:00 Eglise St. Christophe – 94000 – Créteil
22:30 Eglise Ste.Genivieve - 95140 Sarcelles
22:30 Notre Dame du Blanc - Mesnil

**01-01-2023 புதுவருடத் திருப்பலி**

08:45 Eglise Ste.Bathilde – 75500 - Chelles
12:30 Eglise St. Joseph des Nations – Paris

## புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்

## யாழ். ஆயர் ~ ஜனாதிபதி சந்திப்பு



யாழ் மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை அண்மையில் ஜனாதிபதி மாளிகையில் சந்தித்து கலந்துரையாடினார். வடக்கு மக்களின் தேவை–களையும் அங்கு மேற்கொள்ளப்படவேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் பற்றியும் உடன் கவனம் செலுத்தி ஆவன செய்யுமாறு இச்சந்திப்பில் கேட்டுக் கொண்டுள்ளதாக தெரியவருகின்றது.

மேலும் வடக்கில் தமிழ் மக்களின் வாழ்விடங்களை விடுவித்து அவற்றில் மீள்குடியேற்றம், போரில் காணாமல் ஆக்கப்பட்டவர்களைப் பற்றிய தகவல்களை வெளிக்கொணர்தல், சிறைச்சாலையில் நீண்ட காலம் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை விடுவிக்க நடவடிக்கை எடுத்தல், வடக்கில் உயர்கல்வி நிறுவனங்கள், தொழில் நிறுவனங்களை ஆரம்பித்து இளையோருக்கான உயர் கல்வி மற்றும் தொழில் வாய்ப்புக்களை வழங்குதல் போன்ற விடயங்களும் கலந்துரையாடப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது

## பிரான்ஸ் - இலங்கைத் தமிழ் கத்தோலிக்க பணியகத்தால் வறிய மாணவர்களுக்காக - மாணவர் விடுதிக்கான கட்டிட வளர்ச்சி













நான் இந்த வீட்டில் மகனாகப் பிறந்ததற்கு வேதனைப்படுகிறேன் என்றான்'' வார்த்தை இடி தாங்க முடியாமல் மாரடைப்பு (Heart Attack) வந்ததால் தந்தை இறந்துவிட்டார். பேரின்ப நிகழ்வு பெருந்துன்பமாகிவிட்டது. தந்தையின் அடக்கம் முடிந்து மூன்றாம் நாள் ஒரு செபவழிபாடு. அப்போது வாசகம் வாசிக்க திருவிவிலியத்தைத் திறந்தபோது அதிலிருந்து கடிதமும் விலை உயர்ந்த நான்கு சக்கர வாகன சாவியும் கீழே விழுந்தன. வாசித்தான் மகன். அதில் "திருவிவிலியம் ஒரு புதையல் இதில் என் மகனாகிய உனக்கு வைத்திருக்கும் சாவி நம் இல்லத்தின் மகிழ்ச்சிக்கு இட்டுச் செல்லும்.'' தன் தந்தையின் பரிசைத் தவறாக புரிந்து கொண்ட மகன் வேதனையடைந்தான். தன் ஆணவம் தந்தையை இழக்கச் செய்துவிட்டதை உணர்ந்து, மிக நல்லவனாக வாழ்ந்து ஊருக்கும் உலகிற்கும் நல்லவை செய்பவனாக வாழ்ந்தான். இது ஓர் உண்மை நிகழ்வுதான். ஓர் இளம் பெண்

"ஆவலாய் இருப்பது அவரவர் விருப்பம்
அதற்குக் காவலாய் இருப்பதே கடவுளின் விருப்பம்
பாவமோ சாபமோ பகுத்தறி வளித்து – நாட்கள்
சாவதைத் தடுப்பதே சாமர்திய வாழ்வு'' எனப் பாடுகிறாள்.

## ஆவல்கள், அளவீடுகள், அர்த்தங்கள்

எதன்மீது, எவ்வளவு காலத்திற்கு அல்லது எதைப்பெறும்வரை, எதற்காக என்ற அடிப்படைக் கேள்விகளைக் கொண்டே ஆவல்களை உருவாக்கிக் கொள்வோர் திட்டமிட வேண்டும். அத்திட்டத்தின் பலனாகக் கிடைக்கும் வெற்றியோ நிலைத்திருப்பதா அல்லது நீர்மேல் குமிழி போன்றதா என்ற வினாக்களுக்குப் பதிலளிப்பதாய் அமையும்.

பலர் சின்னச் சின்ன ஆசை, சிறகடிக்க ஆசை என்று எளிதில் – எங்கும் கிடைக்கும் சிலவற்றின் மீது ஆவல் வைத்து அவை கிடைத்தவுடன் ஆவலை மாற்றிக்கொள்வர். வேறு பலர் நீண்ட நாள் பயன் என்ற கண்ணோட்டத்தில் இடங்கள், பொருள்கள், இல்லங்கள் என பட்டியலை நீட்டி சிறப்புத் திட்டம் தீட்டிச் செயல்பட்டு வெற்றி பெறுவர் அல்லது அந்த வாய்ப்பை இழப்பர்.

மேலும் பலர் வாழ்வில் ஒரே இலக்காக வருங்காலத்துணை (ஆண்–பெண்) பற்றிய ஆவலை கனவாக்கி கச்சிதமாய் பெற்றுவிடுவர். அல்லது அவ்வாய்ப்பை இழப்பர்.

சிலர் எனக்கேன் ஆவல்? இருக்கிறதே கேவல் என்று இயலாமையைப் பறைசாற்றி தாழ்வு மனப்பான்மைக்கு எடுத்துக்காட்டாக இருப்பர்.

பொதுவாக ஒன்றை எச்சரிக்கையாக விவிலியம் கூறுகிறது. யாருடைய ஆவலும் காற்றைப் பிடிக்கக் கணக்குப் போடுவதாக இருத்தலாகாது. (காண். 2:11–17).

## ஆவல்கார இளையோரே, அமர்ந்து சிந்தியுங்கள்!

உங்களது ஒவ்வொரு ஆவலையும் நிறைவேற்றி கொடுக்க, அதனால் நீங்கள் கொண்டிருக்கும் கவலையைக் கண்ணோக்கி உங்களைக் காக்க கடவுள் உங்கள் மேல் கவலை கொண்டுள்ளார். (காண்.1 பேது 5 : 7).

**எனவே நீங்கள் ஆவல் கொள்ளுமுன் கீழ்க்கண்ட கோணங்களில் சிந்தியுங்கள்:**

எனது ஆவலால் (களால்) விளைவது நன்மையா? தீமையா? யாருக்கு நன்மை? யாருக்குத் தீமை?

**நன்மையெனில்** அதை நிறைவேற்ற நான் எந்த வழிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்?
அப்படிக் கடைப்பிடிக்கும் போது யார் யாரை எவ்வளவு காலத்திற்கு ஈடுபடுத்த வேண்டும்.
பெற்ற பலனை எப்படிப் பிறருடன் பகிர்ந்து கொள்வது?
என் தனிப்பட்ட ஆவலா? எம் குழுவினரின் ஆவலா?
கட்டாயப்படுத்தப்பட்டு கனிய வைக்கும் காரியமா?
உரிமை சம்மந்தப்பட்டதா? உணர்வு சம்பந்தப்பட்டதா?
பயன் சிறிது காலமா? நெடுங்காலமா?

**தீமையெனில்**
உருவான இடத்திற்கே அதை அனுப்பிவிடல் நன்று.
பழக்க வழக்கங்களால் ஏற்பட்ட பண்பாட்டுச் சீரழிவா?
போதைப் பழக்கமா? முறையற்ற பொருள் சேர்ப்பா? களங்கம் கற்பிக்கும் அறநெறியை மாய்க்கும் அவலங்களா? தவறான ஆவல்களை இனம் காண்போம். உடனே அகற்றுவோம்.
ஆன்றோரைச் சந்தித்து ஆன்ம நலக்கலந்துரையாடலில் ஈடுபட்டு முடிவெடுப்பது உகந்தது.

## அன்பு இளையோரே இன்ப நிலையோரே

சமுதாயம் பாராட்டும் ஆவல்களைத் தேர்ந்தெடுத்து
சரித்திரம் படைத்திடுவீர்.
வேண்டாத விபரீத ஆவல்களை விலக்கி வெற்றி காண்பீர்.!



இளையோர் களம்

# இளையோர் வாழ்வில் ஆவலாய் இருத்தல்

## ஆவலின் பின்னணியும் இளையோரின் எண்ணங்களும்

வேதியர் பேரா. தீ. ம. சந்தியாகு வேங்கிடக்குளம், இந்தியா

ஆவலுக்கும் வயதிற்கும் தடையில்லை எனலாம். ஏனெனில் எந்த வயதினருக்கும் ஆவல்கள் எழுவதும், ஆர்ப்பாட்டம் செய்வதும், ஒரு கால கட்டத்தில் ஓசையின்றி ஒடி அடங்குவதும் இயல்பான நிகழ்வுகள்.

- ♦ தனது முதிர்ந்த வயதில் 2 ஆம் வத்திக்கான் சங்கத்தைக் கூட்டிய திருத்தந்தை 23 ஆம் ஜான் எல்லோராலும் போற்றப்படுகிறார்.
- ♦ தள்ளாத வயதிலும் பொல்லாத சூழலிலும் தலை நிமிர்ந்து இளையோருக்குத் தத்துவங்களைப் பொழிந்தார் கிரேக்கப் புரட்சியாளர் சாக்ரட்டீஸ்
- ♦ தனது எண்பத்து மூன்று வயதினை எட்டிய நிலையிலும் இளையோர் மட்டில் ஏக்கமாயிருந்து ‘ மிக மிக ஆவலாய் இருந்தேன்.’ என்ற திருத்துாது மடலை எழுதி எழுச்சிமிகு வரலாறு படைத்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

இப்படி சிறார் முதல் முதியோர் வரை எல்லோருக்கும் ஆவல்கள் எழுவதும், அவற்றைச் சூழலுக்கும் தேவைக்கும் ஏற்ப செயல்படுத்துவதும் இன்றைய உலகின் அன்றாட நிகழ்வுகளாகும். ஆனால் இளையோருக்கு எத்தகைய ஆவல்கள் அவர்களை அவர்கள் வாழும் சமூகத்திற்கு அடையாளப்படுத்தி உயர்த்தும் என்பதையும், எவையெல்லாம் அவர்களது எதிர்காலத்தைக் கேள்விக்குறியாக்கி, அடையாளங்களையும் ஏன் முகவரியையுமே இழக்கச் செய்யும் என்பதையும் குறிப்பால் உணர்த்தி “ இளையோர் உலகத்தைக்” காப்பது நம்மவரின் கடமையும் இன்றைய உலகின் தேவையுமாகும். இதை அந்தந்த காலகட்டத்தில் செய்யாததனாலே, ஆங்காங்கே எதிர்ப்புச் சூழலும் வெறுப்புச் சூழலும் உருவாகி இளையோரைச் சீரழிக்கும் சூழலையும் நாம் பார்க்கிறோம்.

### திரும்பிப் பார்க்கத் துாண்டும் திருவிவிலிய நிகழ்வுகள்

- ∗ தொடக்க நூல் 4:1–16 பகுதியில் உடன்பிறப்புகளான காயினும் ஆபேலும் இணைந்து வாழ முடியா பொறாமைச் சூழல். என்ன நடந்தது என்பதை நாமறிவோம். ஆவலாய் வாழ வேண்டிய ஆபேல் கொலை செய்யப்படுகிறான்.
- ∗ இந்த உடன் பிறப்பு மோதலின் இன்னொரு நிகழ்வாக தொடக்க நூல் 37 மற்றும் தொடர் அதிகாரங்கள் காட்டுகின்றன. யோசேப்பு தம் சகோதரர்களால் அடையும் எண்ணற்ற துன்பங்களை பகைமையின் வெளிப்பாடாக பாழ்கிணற்றில் போடப்படுதல், பின்னர் விற்கப்படுதல்.
- ∗ காவல் அரணாயிருக்க வேண்டிய பேரரசர் தாவீது, தனது போர்வீரர் உரியாவின் மனைவி பத்சேபாவை அடைய மேற்கொண்ட மிக மோசமான செயல்பாடுகள் (காண், 2 சாமுவேல் 11 ஆம் அதிகாரம்.)
- ♦ வாழ்க்கைச் சுதந்திரத்தை விரும்பிய இளைய மகன் தன் சொத்தையெல்லாம் தனது தாறுமாறான வாழ்க்கையால் பாழாக்கினான். (காண். லூாக் 15:11–32).
- ♦ சொத்துச் சேர்க்க வேண்டும் என்ற பேராசையால் நிலம் விற்ற தொகையை ஏமாற்றி தங்கள் உயிரை மாய்த்துக்கொண்ட தரம் கெட்ட தம்பதியர் அனனியா சப்பிரா (காண். தி.ப 5:1 – 11)

இவை எல்லாவற்றிலும் தொடர்புடைய நபர்கள் எல்லோருமே இளையோர் வயதுடையவர்கள்தான். இப்படி எல்லா இளையோருமே கெட்டவர்களாகத்தான் விவிலியம் குறிப்பிடுகிறதா என்றால் இல்லை எனலாம்.

**எடுத்துக்காட்டாக :–**

யோசேப்பு தம் சகோதரர்கள் தமக்கிழைத்த துயர்களையெல்லாம் தமது உயர் குணத்தால் மறந்துவிட்டு தம் சகோதரர்களுக்கு வழிகாட்டியதையும் வாழவளித்ததையும் தொடக்க நூல் 42–45 அதிகாரங்கள் விரித்துரைக்கின்றன.

- ⇒ தாவீதின் மறுபக்கமாக எதிரியை மன்னித்த நிகழ்வைப் பார்க்கலாம். தன்னைக் கொல்லத்தேடிய சவுல் அரசனே தன் கையில் இருக்கும்போது துன்புறுத்தாமல் விட்ட துாய நிகழ்வு (காண். 1 சாமு, 24ம் அதிகாரம்).
- ⇒ இறை வேண்டல் செய்து தப்பித்த 3 இளைஞர்களின் நம்பிக்கை வாழ்வு (காண். தானி (இ) 1)
- ⇒ தோபித்துக்கு வழிகாட்டிய இளைஞர் இரபேல் (வானதுாதர்) வாகி. தோபித்து 5:1–23,
- ⇒ இயேசுவே ஓர் இளைஞர். ஆவர் உண்மைக்குச் சான்று உரைப்பதே தமது பணி என்று வாழ்ந்தார் (லூாக் 23:34:43, 45)

பவுல் ஓர் அடிமைக்கு வாழ்வளித்த உன்னத மனிதர். அவரது அனைத்து நன்மைத்தனங்களும் சலமோனுக்கு எழுதிய திருமடலில் வெளிப்படுகின்றன. ஒனேசிம் என்ற அடிமையை உரிமை மகனாக, இதயமாக, நண்பராக ஏற்றுக்கொள்ளச் செய்தார். அவரும் ஓர் இளைஞர்தான்.

இளையோர் தம் ஆவலை வெளிப்படுத்திய பல நிகழ்வுகளைப் பார்த்தோம். இதோ ஓர் இக்கால நிகழ்வு. அது பணக்காரக் குடும்பம். மகனுக்கு பிறந்தநாள். தனது தந்தை ஓர் உயரிய பரிசைத் தனக்குத் தரப் போகிறார் என்று கூறி பல பணக்கார இளைஞர்களைத் தன்னுடன் அழைத்துக் கொண்டு கல்லூரியிலிருந்து வருகிறான் மகன். மிக ஆடம்பரமான விழா. கேக் வெட்டி, பாடல் இசைத்து இறுதியில் பரிசு வழங்கும் நிகழ்ச்சி எல்லோரது கண்களும் அகலத் திறந்திருந்தன. தந்தை தனது மகனுக்குத் திருவிவிலியம் ஒன்றைப் பரிசாக அளித்தார். அதை வாங்கிய மகன் ஏமாற்றத்தின் உச்சியில் “ நீயெல்லாம் ஒரு தந்தையா? இது எனக்குக் கிடைக்காத பொருளா?



# பசித்திருப்பவன் விழித்திருப்பான்

அருட்பணி. ஜெயசீலன் சவேரியார் பிச்சை ச.ச.

மாலை நேரம் குளிர் கூடும் காலம் கண்கள் இறைவனில் உறைந்திருக்க ஆலயமணி ஓசையில் உதடுகள் இறைவனின் புகழ் பாட, இறுதியில் வார்த்தைப் பகிர்வுக்காக வந்த சகோதரர் ஊதாரி ஊறறிந்த உண்மையை விளக்கினார். கேட்ட கதை, தெரிந்த விளக்கம், அறிந்த மொழி மனதின் பார்வை மெதுவாக இடம்மாறத் தொடங்கியது. சமையலறையிலிருந்து வந்த இரவு உணவின் வாசம் மெல்ல மெல்ல என்னை மடைமாற்றம் செய்தது. பசியின் மௌனம் கலந்தது வயிற்றின் ஓசை உயர்ந்தது. தன்னை மெதுவாக மறந்த அந்த நேரம் ஆம் பசிதான் காரணம் என்றார் அந்த சகோதரர். சட்டென்று விழித்துக்கொண்டேன், ஊதாரி மைந்தனின் மனமாற்றத்திற்கு காரணம் அவன் பசி என்றார். குழம்பிப் போனேன். ஊதாரி மைந்தன் அவன் வீட்டிற்கு திரும்பியதற்குக் காரணம் மனமாற்றம் அல்ல மாறாக பசியின் கோரப் பிடியில் சிக்கியிருந்த அவன் தந்தையின் வீட்டில் பலர் பசியை போக்கியிருக்க நான் மட்டும் இங்கு பசியால் செத்தொழிகிறேனே! என் தந்தையிடம் செல்வேன் பசியை வெல்வேன் என்ற பசியின் எண்ணம் அவனை மனம்மாறச் செய்தது, அவனை தந்தையிடம் அழைத்து வந்தது. ஆக இங்கு மனமாற்றம் பசியால் தொடங்கியது என்று முடித்தார் அந்த சகோதரர். மனதில் ஒரு வெளிச்சம். பசி ஒருவனை மாற்றத்திற்கு இட்டுச் செல்கிறது.

* பசித்திருப்பவன் விழித்திருப்பான்.
* பசித்திருப்பவன் பகிர்ந்திருப்பான்
* பசித்திருப்பவன் பல துன்பங்களை மறந்திருப்பான்.
* பசித்திருப்பவன் துயரங்களை தூக்கி எறிந்துவிடுவான்.

பசி ஒருவனை விழித்தெழச்செய்யும். பசியின்மை ஒருவனை மழுங்கடிக்கும். பசி ஒருவனை தூங்கவிடாமல் துரத்தும் பசியின்மை அவனை துக்கத்தால் தளர்த்தும். வரலாற்றைப் புரட்டி பார்த்தோமேயென்றால் மாமனிதர்கள் பலர் பசி அறிந்தவர்களாகத்தான் இருந்திருப்பார்கள். பசிதான் அவர்களின் இலட்சியப் பாதையின் தொடக்கமாக இருந்திருக்கும். பசியில்லா பயணம் பாதை மாறிய பயணம். அதையே ஊதாரி மைந்தனின் தமையன் நமக்கு எடுத்துச்சொல்கிறான். அவன் பசி மறந்தவன் தினசரி வாழ்வில் உறைந்தவன். தந்தையோடு தங்கி விட்டதால் அவன் வசம் இருந்த செல்வங்களை அறியாதவன். விழித்தெழுந்தவனின் மனமாற்றங்களை உணராதவன். அன்றாட சொகுசு வாழ்க்கையில் தன்னை இழந்தவன் பசியின் போராட்டப் பார்வையை மறந்தவன். தம்பியின் மனமாற்றத்தை ஏற்றுக்கொள்ள முடியாமல் முணு முணுக்கும் மூன்றாம் மனிதனாக மாறிவிட்டான் ஆழ்ந்த உறக்கத்தில் உறைந்து விட்டான்.

உண்ட மயக்கம் உறக்கத்தில் உறையும் உணவில்லாதவன் உறக்கத்தை மறந்திருப்பான். பசித்தவன் என்றுமே தூங்கா விழிகளோடு தொடர் தேடலில் இருப்பான் என்பது இங்கு நிஜமாகிறது. உடல் பசி உணவைத் தேடும் உள்ளத்தின் பசி உறவுளைத் தேடும் ஆன்மீகப் பசி ஆண்டவனைத் தேடும். பசி வந்தால் பத்தும் பறந்து போகும் என்று சொல்வார்கள். உடல் பசியோடு வாடும் போது கடவுளைப் பற்றியோ கற்றலைப் பற்றியோ அறிதலைப் பற்றியோ ஆராய்ச்சியைப் பற்றியோ அங்கலாய்க்க முடியாமல் உடலின் உணவுத் தேவையைப்பற்றி மட்டுமே எண்ணும். பசியின் குரல் கேட்கும் போது தேடல் முழுவதும் வயிற்றை நிரப்பும் வழிகளையும் விடயங்களையும் நோக்கியே அமையும். அன்றாட வழ்க்கையில் கூட நமக்கு பசி எடுக்கும் போதுதான் நாம் உணவைத் தேடுவோம். பசி இத்தேடலின் தொடக்கம். அதுபோல மனதளவில் காயப்படும் போது உறவுகளை நட்புகளை தேடுவது இயற்கை. உள்ளத்தின் காயங்களை உறவுகள்தான் குணப்படுத்தும். தனிமையில் தள்ளாடும் போது தரமான தார்மீக நட்புகள்தான் தோள்கொடுக்கும். உள்ளத்தின் நட்பு உறவுகளே! உள்ளப்பசியின் தேடலும் உறவுகளே! மேலும் ஆன்மீகப் பசி ஒருவனை அன்பனாக்கும் ஆசானாக்கும் ஆளையே புரட்டிப்போடும். ஆன்மீகப் பசி ஆலயத்தில் ஆண்டவனைத் தேடும். ஐயம் என்னவென்றால் பசியறியா உலகோடு உல்லாசம் செய்வது.

சொகுசு உலகை நோக்கிப் பயணம் செய்யும் நாம் பசியறியாமல் திசைமாறிச் செல்வது மெத்தனப் போக்கு. உடல் பசியின் மொழி அவ்வப்போது நமது சொல்லானாலும், உறவுப் பசியும் ஆன்மீகப் பசியும் நமது அகராதியிலிருந்து அகற்றப்படுவது ஆழ்ந்த வருத்தம். உறவுகள் இல்லையென்றால் உலகம் இல்லை. உயிர்களின் உறவில்தான் உலகம் இயங்குகிறது. அந்த இயக்கத்திற்கு உயிர் கொடுப்பது ஆன்மீகம். இந்த இரண்டும் நம்மை விட்டு வெகுதொலைவில் சென்று கொண்டிருப்பது ஏமாற்றம் மட்டுமல்ல மாறாக எச்சரிக்கையும் கூட. உறவும் ஆன்மீகமும் இல்லா உயிர் உறைபனியில் உறைந்த உயிர். உறக்கத்திலிருந்து உசுப்பிவிட உறக்கத்தை உரசிப்பார்க்க வேண்டிய காலத்தின் கட்டாயத்தில் இருக்கின்றோம். பசித்திருப்பவன் என்றுமே விழித்திருப்பான்.

**பசித்திருப்போம் உறவில் உறைவோம்!**



# புதிர் தோட்டம் 83

1 நிலத்தில் முளைக்காத செடி நிமிர்ந்து நிற்காத செடி
2 போவான் வருவான் திம்மப்பன். ஒரு காலில் நிற்பான் திம்மப்பன்
3 அம்பலத்தில் ஆடும் அழகுக் கண்ணனுக்கு அங்கம் முழுவதும் தங்கக் கண்ணாடி
4 அது ஓர் அழகு தேவதை, ஆடும் தேவதை
5 காட்டில் தொங்கும் பொட்டலம், காவல் நிறைந்த பொட்டலம்.
6 சிறுசிறு கதவுகள் செய்யாத கதவுகள், திறக்க அடைக்கச் சத்தம் செய்யாத கதவுகள்
7 உயிரில்லாத பறவை ஊர் ஊராய்ப் பறக்குது
8 நதியில் நடப்பது தரையில் நடக்காது
9 வான தேவன் வடித்த கண்ணீர், மேக தூதன் தெளித்த பன்னீர்
10 ஊருக்கு உழைக்கும் உத்தமன், உரக்க ஊதி குரல் எழுப்புவான்

## புதிர் தோட்ட விடைகள் 82

1. வாழைமரம்
2. கானல்நீர்
3. கரும்பு
4. தண்ணீர்
5. எதிரொலி
6. காற்று
7. மின்னல்
8. செங்கல்
9. சீப்பு
10. மின்விசிறி

## உறவுகள் 83க்கான சிறுவர் விவிலிய பதில்கள்

1) ஒளியை உண்டாக்கினார் (1:3)
2) விண்ணுலகம் (1:8)
3) புற்பூண்டுகளையும் விதை தரும் செடிகளையும் கனிதரும் பழங்களையும் படைத்தார். (1:11)
4) விண்விரிவினில் ஒளிப்பிழம்புகளைப் படைத்தார். (சூரியன், நிலவு, நட்சத்திரம்) (1:15)
5) கடலின் பெரும் பாம்புகளையும், நீரில் நீந்திவாழும் உயிரினங்களையும் இறக்கையுள்ள எல்லா விதப் பறவைகளையும் கடவுள் படைத்தார் (1:21)
6) கால்நடைகள், ஊர்வன, காட்டு விலங்குகள், மானிடர். (1:24-26)
7) கடவுள் ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தார். அதை ஆசி வழங்கி புனிதப்படுத்தினார்.(2:2)
8) கடவுள் தம் உருவிலும் சாயலிலும் மானிடரைப் படைத்தார். (1:26)
9) மனிதனின் ஆன்மாவை தனது சாயலாகவே படைத்தார் என்று பொருள்.
10) பலுகிப் பெருகி மண்ணுலகை நிரப்புங்கள் என்று ஆசி வழங்கினார். (1:28)

# தூய நற்கருணை



பாஸ்கா நிகழ்ச்சியின் இறுதிப்பகுதி புகழ்த் திருப்பாடல்கள் பாடுவது. இறைவனின் செயல்களுக்கு, தூண்டுதலுக்கு பதில் கூறும் வகையில் இவை அமைகின்றன.

இயேசுவும் தம் சீடர்களோடு சேர்ந்து தன்னில் வெளிப்படும் இறை கருணைக்காக திருப்பாக்கள் இசைத்திருக்கிறார்

இயேசுவின் இறுதி பாஸ்கா உணவு புதிய பொருளோடு பூத்து நின்றது என்றால் அதற்குக் காரணம் இயேசுவின் பல்வேறு பந்தியமர்வுகள். இயேசு தந்த புதிய விளக்கங்கள் அவரின் வாழ்க்கைப் பின்னணியில் உருவாகியவை. அவரின் பல்வேறு அடையாளச் செயல்களின் வரிசையில் மலர்ந்தவை. அவற்றில் முக்கியமான இந்தப் பந்தியமர்வுகள் எவ்வாறு இறுதி உணவின் அர்த்தங்களைப் பாதித்தன என்று எண்ணுவது சிறப்பு.

இயேசு பல்வேறு தரப்பு மனிதர்களோடு பந்தியமர்ந்து உயிர் உறவாடியதை விவிலிய நிகழ்ச்சிகளே நமக்குக் காட்டுகின்றன. பாவிகளோடும் ஆயக்காரரோடும் அவர் பந்தியமர்கிறார் என்று பரிசேயர்கள் குற்றம் சாட்டுகின்றனர். (மத். 9,1) இவர் உண்கிறார், குடிக்கிறார், (பாவிகளின் தோழமையில் காணப்படுகிறார் பாவிகளுடன் தோழமை கொள்கிறார். – இவர் எப்படி கடவுளைப்பற்றி போதிக்க முடியும்? என்று அவரிடம் குற்றம் காண விழைகின்றனர் அவரின் எதிரிகள்.

இயேசு தனது செய்திக்கு அடையாள மொழிகள் தேடிய நேரத்தில் "பந்தியமர்தல்" அவருக்கு கை கொடுக்கின்றது. இறையரசின் புதிய சமுதாயத்தை அந்தப் பந்தியமர்வில் உருவாக்குகிறார் இயேசு. வாழ்க்கையில் ஒதுக்கப்பட்டவர் அந்த அரசில் உரிமைக் குடிமக்களாக மாறுகின்றனர். ஆன்மீகம் என்பது நலிந்தவருக்குப் பணிவிடை செய்வது என்ற ஆழமான கருத்தியலுக்குக் கட்டியம் கூறுகின்றன. இந்தப் பந்தியமர்வுகள், வெளிப்படையாக ஆயக்காரரையும் பாவிகளையும் நண்பர்கள் என்று அழைக்க நல்ல வாய்ப்பைத் தந்தன இந்தப் பந்தியமர்வுகள் (மத் 9,10–13˙ 26,6–13˙ லூக் 19,5) “ யார் என் தாய்? யார் என் சகோதரர்? தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றுவோரே!” என்ற இயேசுவின் கூற்றுக்கு நடைமுறை வடிவம் தந்தன.

இந்தப் பந்தியமர்வுகளால் இயேசு இனம்கண்டு கொள்ளப்பட்டார். எம்மாவூஸ் சீடர்கள் அப்பத்தைப் பிட்கையில் இயேசுவைக் கண்டு கொண்டது, உயிர்த்த இயேசு கரிநெருப்பு மூட்டி விருந்து சாப்பிட அழைத்த போது சீடர்கள் அவரைக் கண்டு கொண்டது போன்ற நிகழ்ச்சிகளுக்கு இயேசுவின் பந்தியமர்வுகள் பின்னணியாக இருந்திருக்கலாம்.

மிகுதி மறு இதழில்......



G.RATHINI

## விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி - 78
## வெற்றியாளர்கள்



### இணைச்சட்டம் 1-34

1) செல்வி: யோசவ் சியாமளா
2) திரு: அருளப்பு கிறிஸ்ரியன்
3) திருமதி: யேசுதாசன் வேர்ஜினியா

1) செல்வி: லுசியா மேரி
2) திருமதி: மேரி ஜொய்ஸ்
5) திருமதி: மரியா செல்வநாயகம்
6) திருமதி றீற்றா செல்வரட்ணம்

## திருத்தந்தை பிரான்சிஸ், புதிய ஆயர்கள் சந்திப்பு



**இறைவேண்டல் என்ற எண்ணெய் இருக்கும் வரை, இப்பூமியில் நம்பிக்கைத் தீபம் எப்போதும் எரிந்து கொண்டே இருக்கும் – திருத்தந்தை பிரான்சிஸ்.**

ஆயர்கள் பேராயம் மற்றும், கீழை வழிபாட்டுமுறை பேராயத்தால் நடத்தப்படும் பணிப்பயிற்சியில் பங்கு பெறும் ஏறக்குறைய ஏறத்தாழ 200 புதிய ஆயர்களை, செப்டம்பர் 19, திங்களன்று, வத்திக்கானின் கிளமெந்தினா அறையில் சந்தித்து உரையாடினார், திருத்தந்தை பிரான்சிஸ்.

செப்டம்பர் 19, இத்திங்களன்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறியுள்ளார். ஏறக்குறைய ஒவ்வொரு நாளும் ஒன்பது மொழிகளில் தன் டுவிட்டர் பக்கத்தில் குறுஞ்செய்திகளை வெளியிட்டு வருகின்ற திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இத்திங்களன்று இறைவேண்டல் (prayer) என்ற ஹாஷ்டாக்குடன் பதிவு செய்துள்ள குறுஞ்செய்தியில் இவ்வாறு கூறியுள்ளார். மேலும், பொதுநிலையினர், குடும்பம், மற்றும், வாழ்வு திருப்பிட அவையின் தலைவர் கர்தினால் கெவின் ஃபாரெல், பாரிஸ் பேராயர் laurent Ulrich ஆகிய இருவரும் திருப்பீடத்தில் இத்திங்களன்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களை தனித்தனியே சந்தித்துள்ளனர்.

## விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி 78
## சரியான பதில்கள்

### இணைச்சட்டம் 11 - 34

**இடமிருந்து வலம்**

1. தகராறு 2:5
2. அவன் 23:10
7. இரை 13:15
8. சந்தி 31:14
10. சதை 32:42
13. நான்கு 3:11
14. தூண் 31:15
17. என் 4:21
21. வரை 3:14
27. மலடு 7:14
32. விடு 19:13
37. கொடு 27:10
38. வெட்டி 20:19
40. கண் 34:7

**வலமிருந்து இடம்**

2. அவை 28:24
3. உடன் 5:2
4. வெள்ளி 22:29
5. உடை 31:9
11. ஒப் 21:10
15. பண் 32:7
16. ன் 33:6
19. விண் 30:12
23. பாலை 8:16
26. பழி 21:8
27. மழை 11:14
34. குரல் 26:7
35. நன்கு 17:4
39. கூட்டி 5:15
41. கண்கள் 34:7


**மேலிருந்து கீழ்**

1. தங்கி 28:65
2. அஞ்ச 25:18
3. உனக்கு 30:14
4. வெளி 32:25
7. இதை 13:11
8. சபி 27:17
9. தன் 11:17
12. வேசி 22:21
13. நாடு 8:8
14. தூண்டி 13:5
19. வில 31:8
20. வழங்கு 15:10
21. வழி 32:4
22. பேழை 31:26
24. விடு 19:13
25. சாவான் 18:20
26. பணிந்து 9:18
28. மேல் 29:20
29. மர 30:6
34. குடி 12:29

**கீழிருந்து மேல்**

5. உன் 15:7
6. நட 6:13
10. சமைக்க 14:21
11. ஒளி 19:11
11. தூக்கி 2:21
18. மிகு 3:24
22. பேசி 20:9
23. பாலு 11:9
27. மலை 8:9
31. பொழி 32:2
33. பல 17:17
36. செவி 28:45
40. கண்டு 32::19
41. கடும் 9:22

## சிறுவர்களுக்கான விவிலிய வினா - 84



**மத்தேயு**

1) பேதுருவின் சகோதரனின் பெயர் என்ன?
2)முதல் சீடர்களை அழைத்த போது இயேசு கூறியது ?
3)யாக்கோப்பும், யோவானும் யாருடைய மகன்?
4)இயேசு முதல் சீடரை அழைத்த போது அவர்கள் செய்தது என்ன?
5)இயேசு யாக்கோபுவையும் அழைத்த போது அவர்கள் என்ன செய்து கொண்டிருந்தார்கள்?
6) இயேசு கலிலேயா பகுதி முழுவதும் சுற்றி வந்த பின் செய்தது என்ன?
7) இயேசு எங்கிருந்து மலைப் பொழிவை கற்பித்தார்?
8)துயருறுவோருக்கு கிடைப்பது ?
9)கடவுளின் மக்கள் என அழைக்கப்படுபவர்கள் யார்?
10) மனிதரால் மிதிபடும் வேறு ஒன்றுக்கும் உதவாது என குறிப்பிடபடுவது எதனை?

# விவிலிய அறிவுப்போட்டி - 78




1. எவனாவது அவர்களுக்கு உன்னைக் கொடுக்கவில்லையெனில் அவனுக்கு எதிராய் போர் தொடுக்கிறார்கள் என்று யார் குறித்து ஆண்டவர் கூறுகின்றார்?
2. மாரோத் நகர மக்கள் நன்மை வருமென ஏக்கத்தோடு காத்திருக்கின்றனர். ஏனெனில் தீங்கு ஆண்டவரிடமிருந்து இறங்கி எந் நகர வாயில் மேல் விழுந்தது?
3. அசீரியர் நம் நாட்டுக்குள் எல்லைகளைக் கடந்து வரும்போது யார் நம்மை அவர்களிடமிருந்து காப்பார்கள்?
4. வாருங்கள் ஆண்டவரின் மலைக்கு ஏறிச்செல்வோம். யாக்கோப்பின் கடவுளது கோயிலுக்குப் போவோம்'' யாரால் கூறப்பட்டது?
5. யார் மேல் ஆட்சி செலுத்துபவன் அவர்கள் கோலால் கன்னத்தில் அடிபடுகிறான்?
6. நாடு தீட்டுப்பட்டு விட்டது. பேரழிவுக்கு உள்ளாகப் போகிறது. ''திராட்சை இரசத்தையும், மதுவையும் உங்களுக்கு நான் பொழிவேன்'' என்று விண் சொற்களையும் பொய்களையும் ஒருவன் பிதற்றினால் அவன் மக்களுக்கு என்னவாகத் தென்படுகிறான் என்று கூறப்படுகிறது?
7. எங்குமே அநீதி குறித்து யார் கையூட்டுக் கேட்கின்றனர்?
8. இறுதி நாட்களில் பல நாட்டு மக்களும் எதை நோக்கி ஓடிப்போவார்கள்?
9. நீதியை அறிந்துகொள்வது உங்கள் கடமையன்றோ கேளுங்கள் என்று யாருக்குக் கூறப்பட்டது.?
10. ஆண்டவருடைய மீட்புச் செயல்களை எப்போது உணர்வாய் என்று கூறப்படுகிறது.?

## விவிலிய பொது அறிவுப்போட்டி முடிவுகள் - 77

**பதில்கள் (யோனாஸ் நூல்)**

1) யோனாசிடம் கூறினார் (4:4)
2) நினிவே நகர் (3:4)
3) கப்பல் தலைவனால் கேட்கப்பட்டது. (1:6)
4) தார்சீசுக்கு போக தயாராய் இருந்தார். (1:3)
5) நகரத்திற்கு கிழக்கே போய் தங்கினார். (4:5)
6) 3 பகலும் - 3 இரவும் (1:17)
7) சாம்பலில் அமாந்தனர் (3:6)
8) ஆமணக்குச் செடி (4:6)
9) அமித்தாயின் (1:1)
10) நினிவே மன்னனால் கட்டளையிடப்பட்டது. (3:8)

## சிறுவர்களுக்கான ஒன்று கூடல்

பெல்வில் சிற்றாலயத்தில் நேரம்: 9:00க்கு



02-10-2022
06-11-2022
04-12-2022

# விவிலியத் தேடல்



## "அவர் வளர்க"

வெவ்வேறு கிறிஸ்தவ சபைகளின் வழிபாட்டில் புதிய ஏற்பாடு மற்றும் பழைய ஏற்பாட்டுப் பகுதிகள் வாசிக்கப்பட்டு விளக்கப்படுகின்றன. விவிலியத்தின் தாக்கம் சமயம், தத்துவம், மற்றும் அரசியல், இசை, ஓவியக் கலை, இலக்கியம், நாடகம் போன்ற பல துறைகளில் வெளிப்படுகின்றது.

### புதிய ஏற்பாட்டு நூல்கள்

வில்லியம் டைன்டேலே (William Tyndale) எபிரேயம் கிரேக்க மொழிகளில் இருந்த புதிய ஏற்பாட்டை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர். புதிய ஏற்பாட்டில் 27 தனிப்பட்ட சிறிய நூல்கள் காணப்படுகின்றன. இச்சிறு நூல்கள் அனைத்திலும் இயேசு மையகர்த்தாவாக இருக்கிறார். கிறிஸ்தவத்தின் எல்லா உட்பிரிவினரும் இவற்றை மாற்றமின்றி ஏற்றுக் கொள்கின்றனர். புதிய ஏற்பாட்டில் இயேசுவின் வரலாற்றைக் கூறும் நான்கு நற்செய்தி நூல்களும், இயேசுவின் சீடர்களான பேதுரு, பவுல் ஆகியோர் கிறிஸ்தவ நற்செய்தியைப் பரப்பிய வரலாற்றை எடுத்துரைக்கிற திருத்தூதர் பணிகள் என்னும் ஒரு நூலும், படிப்பினை வழங்கும் இருபத்தொரு மடல்களும், மற்றும் ஒரு வெளிப்பாட்டு நூலும் அடங்கியுள்ளன. கி.பி. 50களில், எபிரேய மற்றும் கிரேக்க கலாச்சாரம் நிலவிய பகுதிகளில் பேச்சு மொழியாயிருந்த கொயினே கிரேக்கத்தில் புதிய ஏற்பாட்டு நூல்கள் எழுதப்பட்டன. திருவிவிலியத்தில் திருமுறையாக ஏற்றுக்கொள்ளப்பட்ட அனைத்து நூல்களும் கி.பி. 150க்குள் எழுதப்பட்டதாகக் கருதப்படுகிறது.

### நற்செய்திகள்

ஒவ்வொரு நற்செய்தி நூலும் இயேசுவின் இவ்வுலக வாழ்க்கையை கூறுகின்றது. அவற்றில் இயேசுவின் போதனைகளுக்கு முக்கிய இடம் கொடுக்கப்பட்டுள்ளது. திருச்சபையால் ஏற்கப்பட்டுள்ள நான்கு நற்செய்தி நூல்கள் யாரால், எப்போது எழுதப்பட்டன என்பது பற்றித் துல்லியமாக அறிய இயலவில்லை. ஆயினும், கிறித்தவ மரபுப்படி,

* மத்தேயு நற்செய்தியை அப்போஸ்தலரான (திருத்தூதர்) மத்தேயு எழுதினார்.
* மாற்கு நற்செய்தியை அப்போஸ்தலரான பேதுருவின் சீடர் என்று கருதப்படும் மாற்கு எழுதினார்.
* லூக்கா நற்செய்தியை சவுல் என்று அழைக்கப்பட்டு கிறிஸ்துவை ஏற்ற பின்னர் பவுல் என பெயர்மாற்றம் செய்யப்பட்ட இறையடியாரின் சீடரான லூக்கா எழுதினார்.
* யோவான் நற்செய்தியை இயேசுவின் அன்புச் சீடர் எனக் கருதப்படும் அப்போஸ்தலரான யோவான் எழுதினார்.

இவற்றில் முதல் மூன்று நூல்களும் தமக்குள் உள்ளடக்கம், நடை போன்றவற்றில் மிகவும் ஒத்தவையாகும். எனவே அவை ஒத்தமை நற்செய்திகள் (Synoptic Gospels) என அழைக்கப்படுகின்றன

(தொடரும் ..............)

# குறுக்கெழுத்து புதிர்

## போட்டி இலக்கம் 79

### யோசுவா (1-24 அதிகாரங்கள்)

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | 2 | | | 3 |
| | 4 | | | | 5 | | 6 | 7 | |
| | | 8 | | 9 | | 10 | 11 | | |
| | 12 | 13 | 14 | | | | 15 | | |
| | | 16 | | 17 | | | 18 | 19 | |
| 20 | 21 | | 22 | | 23 | | | | 24 |
| | 25 | | | | 26 | | | | 27 |
| 28 | | | | | 29 | | | | |
| | 30 | | 31 | | | 32 | | 33 | |
| 34 | | 35 | | 36 | 37 | | 38 | | 39 |

### இடமிருந்து வலம்

1. என் தந்தை வீட்டிற்கு…………காட்டுவீர்கள்
5. லிப்னாவுக்குச் சென்று அதனுடன்…..தொடுத்தனர்.
8. ………….சலேமின் மன்னன் அதோனிசெதக்கு..
9. மூதாதையர் …………ந்து வந்த தெய்வங்களை..
10. ஆண்டவரின்……………மோசே.
14. லேவியர்க்கு உங்கள் நடுவில் பங்கு…………
16…………வற்றை கவர்ந்து கொண்டான்.
17. அறுவடை நாள்களில் இந்…….கரைபுரண்டு ஓடும்.
19. நாங்கள் நிரப்பிய…………புதியனவாக இருந்தன.
22. ……..கையில் ஒப்படைத்து விட்டேன்.
23.அவனது………யும் உன்கையில் ஒப்படைக்கிறேன்.
25. அவரது…………..அவரே பொறுப்பாவார்.
26. நீ நிற்கும்……… புனிதமானது.
28…………கதவு சாத்தப்படும்பொழுது
29. இந்நாள்வரை…………செய்ததுபோல்
30. அனைத்தையும் நெருப்பிலிட்டு……….த்தனர்.
31. கல்……..யால் இறந்தவர்கள் அதிகம்.
37. அதற்கருகில்……..களை நிறுத்துங்கள்.

### வலமிருந்து இடம்

2. இந் நதி கரை புரண்டு ……..
3. அதன்……….அனைத்தும் உங்களுக்குச் சொந்தம்.
4. லேவியரின்……..பெரும் தலைவர்கள்
5. திருவுளச் சீட்டுப் ………வேன்.
6. அ……களது எல்லை: இஸ்ரியேல்.
8. உனக்கு ……… வேண்டும்.
12. தலைமைக்குரு சாகும்………. அவர் -தங்குவார்.
15. ஒரு……….தோளில் சுமந்து செல்லட்டும்.
17. இஸ்ராயேல் மக்களுக்கு…….மெனத் தோன்றியது.
18. ஆண்டவர் உங்களுக்கு …………அருள்வார்.
22. நாட்டை …….வறிந்து வாருங்கள்
23……….மோசேயுடன் இருந்ததுபோல் உன்னோடும் இருப்பேன்.
27……….இறைவன் உங்களிடையே இருக்கின்றார்.
32. ……….ய தினம் உங்களைத் தூய்மைப்படுத்திக் கொள்ளுங்கள்.
33. உங்கள் ……..ங்களுக்கு அருகில் வருவீர்கள்.
39. நீங்கள் திரளான ………..

### மேலிருந்து கீழ்

1. நான் செய்தது ………வே.
2. ………. இடம் கொடுப்பார்..
3. எவனாலும் உங்களை……….நிற்க இயலவில்லை.
4. அவர்கள் ……… அஞ்சாதே.
6. அவ்வரண்ட தரை ……..யாக நடந்தனர்..
9. மேகேபல், அக்சீபை ஒட்டிய கடலில் முடிவடைகிறது.
12. குடும்பம் குடும்பமாக அருகில் ……..ம்.
13. யோசுவா ………வழங்கி அவர்களை அனுப்பினார்.
17. என்பதை…………அறிந்து கொள்ளுங்கள்.
18. ……….க்கல நகரான கிலயாத்து.
19. நெஞ்சம் உறுதி இழந்து தண்ணீர் ………ஆனது
20. ஏன் நீ எங்களுக்குத் தொல்லை வருவித்……..
30……..நல்லதும் நீதியும் ஆனதோ அதைச் செய்யுங்கள்.
31. இதோ! ………ணில் தோன்றிய யாவரும்
32. அவை அங்கே இந்………வரை உள்ளன.

### கீழிருந்து மேல்

7. கதிரவனே கிபயோனில்……….
8. உங்களுக்கு …………குறிக்கும்.
9. ஆண்டவருக்கு செலுத்தப்…………எரிபலியாகும்.
10. பெத்சானிலும் அதன்………களிலும்
14. ஆண்டவர் என்னோடு…………..க்கூடும்.
17. எல்லா…….வாக்குகளும் தவறாமல் நிறைவேறின.
18. திருச்சட்ட நூலை உன் முன்னின்று……….ற்றாதே.
19. வரவுமில்லை உள்ளே……….கவுமில்லை.
20. நாட்டின் எதிரில் யோர்……… பகுதிகளில்.
21. திர்சா மன்னன் ………….
24. வீட்டிலிருப்பவர்……….எவராவது கை வைத்ததால்.
28. உம்………மொழியை எதிர்ப்பவன் எவனும்
31. சேயிர்……….யை நோக்கிச் சுற்றுகிறது.
34. …………அதன்படியே செய்தார்.
35. எல்லோரையும் ………. இஸ்ராயேலர் தோற்கடித்தனர்.
36. ஆண்டவரது …………. முன் செல்லட்டும்.
38. ஆண்டவருக்கு எதிராக …………செய்ய வேண்டாம்.
39. ……………….க்குச் சொந்தமாயிற்று.

குறுக்கெழுத்து போட்டியின் விடைகளை தயவு செய்து 05-12-2022 க்கு முன்பு பணியகத்திற்கு அனுப்பி வையுங்கள். நன்றி

## இறைவார்த்தை

**நற்பேறு பெற்றவர் யார்?**

அவர் பொல்லாரின் சொல்லின்படி நடவாதவர். பாவிகளின் தீயவழி நில்லாதவர். இகழ்வாரின் குழுவினில் அமராதவர். ஆனால், ஆண்டவரின் திருச்சட்டத்தில் மகிழ்ச்சியுறுபவர். அவரது சட்டத்தைப் பற்றி இரவும் பகலும் சிந்திப்பவர்.

தி.பா.1:1-12

# பணியகச் செய்திகள்



திருமண ஆயத்தம் பெற விரும்புவோர் 3 மாதத்திற்கு முன்பாக அருட்பணியாளருடன் தொடர்பு கொள்ளவும்.

**01-10-2022 ஞாயிறு 9 மணியிலிருந்து**
**06-11-2022 சனி 9 மணியிலிருந்து**
**திருமண அருட்சாதன வகுப்பு, பெல்வில் சிற்றாலயத்தில் நடைபெறும்.**



திருமுழுக்கு ஆயத்தம் பெற விரும்புவோர் ஒரு மாதத்திற்கு முன்பாக அருட்பணியாளருடன் தொடர்பு கொள்ளவும்.

**வளர்ந்தோருக்கு - திருமுழுக்கு ஆயத்த வகுப்பு**

ஒக்டோ: புதன் 26ந் திகதி - 17:30-18:30
ஒக்டோ: சனி 29ந் திகதி - 17:30-18:30
நவெ: சனி 26ந் திகதி - 17:30-18:30
டிசெ: சனி 10ந் திகதி - 17:30-18:30

**சிறுவர்களுக்கு - திருமுழுக்கு ஆயத்த வகுப்பு**

நவெ: புதன் 23ந் திகதி - 18:30 - 20:00
நவெ: சனி 26ந் திகதி - 18:30 - 20:00
டிசெ: புதன் 07ந் திகதி - 18:30 - 20:00
டிசெ: சனி 10ந் திகதி - 18:30 - 20:00

**பெல்வில் ஆலயத்தில் நடைபெறும்**

## விவிலிய பொது அறிவுப்போட்டி 77 பரிசு பெறுபவர்கள்

## யோவான் ஆகமம்

**1ம் பரிசு: திருமதி: ஜோபனா மரியநாயகம்**
**2ம் பரிசு: திருமதி: மேரி பீல்டா யோண்சன்**

**ஏனையவர்கள்:**

1. திருமதி: யேசுதாசன் மேரி ஜொய்ஸ்
2. செல்வி: லூசியா மேரி
3. திரு: அருளப்பு கிறிஸ்ரியன்
4. செல்வி: யோசவ் சியாமளா
5. திருமதி: மறியா செல்வநாயகம்
6. திருமதி: கொன்சன்ரைன் கருணாமலர்
7. திரு: அலெக்ஸ் சில்வெஸ்ரர் சங்கர்
8. நீற்றா செல்வரட்ணம்
9. திருமதி: யேம்ஸ் மேரி நீற்றா
10. திருமதி: அந்தோனி யசிந்தா

**அருட்பணி: போல் மத்தியூ மதன்ராஜ்**
**பணியக இயக்குனர்**

## ஒக்டோபர் - பணியகத் திருப்பலிகள்

**09-10-2022 - பன்னாட்டுத் திருப்பலி**
11:00 - Eglise St. Joseph des Nations-75011-Paris

**09-10-2022 - சதாசகாய அன்னை திருவிழா**
**Chelles - பணித்தளவிழா**
16:00 - Eglise St.André - 77500 - Chelles

**16-10-2022 - செபமாலை அன்னை திருவிழா**
**Blanc-mesnil - பணித்தளவிழா**
16:30 - Eglise Notre Dame du Blanc - Mesnil

**23-10-2022 - செபமாலை அன்னை திருவிழா**
**Créteil - பணித்தளவிழா**
16:30 - Eglise de st. Christophe - 94000 - Créteil

**31-10-2022 - ஒப்புரவு அன்னை திருவிழா**
**28வது ஆன்மீகப் பணியக நிறைவு விழா**
12:30 - Eglise St. Joseph des Nations-75011-Paris







## நவெம்பர் - பணியகத் திருப்பலிகள்

**01 - 11- 2022 அனைத்துப் புனிதர்கள் பெருவிழா**
11:30 - Chapelle NDR. de Belleville 75011 - Paris

**02 - 11- 2022 அனைத்து ஆன்மாக்கள் நினைவுநாள்**
17:00 - Eglise St. Joseph des Nations-75011-Paris

**20 - 11- 2022**
**புனித செசிலியம்மாள் திருவிழா**
11:30 - Chapelle NDR. de Belleville 75011 - Paris

## டிசெம்பர் - பணியகத் திருப்பலிகள்

**04 - 12- 2022 புனித நிக்கொலா திருவிழா**
12:30 - Eglise St. Joseph des Nations-75011-Paris

**08 - 12- 2022 மரியாயின் சேனை திருவிழா**
17:00 - Chapelle NDR. de Belleville 75011 - Paris

**11 - 12- 2022 அமல உற்பவ அன்னை திருவிழா**
11:30 - Chapelle NDR. de Belleville 75011 - Paris

**18 - 12- 2022 புனித தோமையார் திருவிழா**
10:30 - Chapelle NDR. de Belleville 75011 - Paris

# யாழ் குருமுதல்வர் தலைமையில் பாரீஸ் பணித்தள விழா 2022



# இலங்கைத் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப்பணியகத்தின் 33வது லூர்துநகர் திருப்பயணம்





## அனைத்து ஆன்மாக்கள் திருவிழா

**கல்லறைகளை கண்முன்னே வை (யோவான் 6:37–40)**

இறந்தவர்களை நினைத்துப் பார்க்கும்விதமாக நம்பிக்கையோடும் ஆர்வத்தோடும் அனைத்து ஆன்மாக்கள் திருவிழாவைக் கொண்டாடுகிறோம். அனைத்து ஆன்மாக்களின் பரிந்துரை உங்களுக்கு இந்த நாளில் கிடைப்பதாக! இறந்தவர்கள் அனைவரையும் இன்று நாம் நினைத்து அவர்களுக்காக ஜெபிக்கிறோம். நம் அன்னையாகிய திருச்சபை, மோட்சத்திலிருக்கும் தன் மக்களை நினைத்தபின் வேதனைப்படும் தன் மக்களை நினைக்கிறது. அவர்களுக்காக பரிந்து பேசுகிறது. அவர்களுக்கு தன்னாலான உதவி செய்ய முயற்சிக்கிறது. மோட்சத்தில் வாழும் தன் மக்களுடன் அவர்களை சீக்கிரம் ஒன்றிக்கும்படி மன்றாடுகிறது. இன்று ஒவ்வொரு குருவும் மூன்று திருப்பலிகள் வைக்கிறார்கள். முதல் திருப்பலி உத்தரிக்கிற ஸ்தலத்தில் வேதனைப்படும் அனைவருக்காகவும் ஒப்புக்கொடுக்கப்படுகிறது. இரண்டாவது திருப்பலியை பாப்பானவரது கருத்துகளுக்காக ஒப்புக்கொடுக்க வேண்டும். மூன்றாவது திருப்பலியை குரு தமக்குப் பிரியமான கருத்துக்காக ஒப்புக்கொடுக்கலாம்.

**1. அடங்கு** கல்லறைத் தோட்டங்களில் உயர்ந்தவன் – தாழ்ந்தவன், ஏழை – பணக்காரன், ஆண் – பெண் போன்ற எந்தவிதமான வேறுபாடுகளும் கிடையாது. மனிதனின் பிறப்பிலும் சமத்துவம், இறப்பிலும் சமத்துவம். ஏனெனில், இவை இரண்டும் கடவுளின் கையில்! அனைத்து வேறுபாடுகளும் இவை இரண்டுக்கும் இடையில்தான் உள்ளன. காரணம், அவை உங்கள் கைகளில்தான் இருக்கின்றன. சமத்துவத்தில் பிறந்த நீங்கள், சமத்துவத்தில் இறக்கும் நீங்கள், ஏன் வேறுபாடுகளை ஏற்படுத்துகிறீர்கள்?" என்னும் கேள்வியை எழுப்புகின்றன கல்லறைகள். முரண்பாடுகளைக் களைந்து வேறுபாடுகளைக் கொண்டாட அழைக்கின்றன கல்லறைகள். சமத்துவ உணர்வுடன் அமைதியுடன் வாழக் கற்றுக்கொடுக்கின்றன கல்லறைகள். ஆகவே அதிகமாக ஆடுவது ஆபத்து, அடங்கு.

**2. அடக்கு** சில்லறை தேடி அலையும் மனிதர்களே... வாழப் பொருள் தேவை. அதே வேளையில் வாழ்வதற்கும் பொருள் வேண்டாமா?" என்று சிந்திக்கத் தூண்டுகிறது கல்லறைத் திருநாள். நமது வாழ்வு, இறைவன் நமக்குக் கொடுத்துள்ள மாபெரும் கொடை. மாண்புமிக்க அத்தகைய வாழ்வை நல்லமுறையில் வாழ நினைவூட்டுகின்றன கல்லறைகள்! போராசைகளை அடக்கு. உன் ஆணவத்தை அடக்கு. பணத்திற்கான அதிக தேடலை அடக்கு. வாழ்வை பொருளுள்ள விதத்தில் மாற்று. அடக்க வேண்டியவற்றை இன்றோடு அடக்கிவிடு.

**மனதில் கேட்க...** 1. கல்லறைகளை எப்போதும் என் கண்முன் நிறுத்தி வாழ்கிறேனா?

2. அதிகமாக ஆடக்கூடாது ஆடினால் ஆபத்து அதிகம் என்பதை உணர்ந்து வாழ்கிறேனா?

**மனதில் பதிக்க...** தந்தை என்னிடம் ஒப்படைக்கும் எவரையும் நான் அழிய விடாமல் இறுதி நாளில் அனைவரையும் உயிர்த்தெழச் செய்ய வேண்டும். இதுவே என்னை அனுப்பியவரின் திருவுளம் (யோவா 6:39)